Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 30 (03.02.2003) திங்கட்கிழமை இதழ் :125



ஒறிஜினல் கோலம் சாறி, பட்டு வேட்டிகள், கோலம் கூறை சாறிகள், பட்டு வேட்டி வகைகள் மற்றும் றெடி மெட் ஆடைகள், பல்வேறு ரக துணி வகைகள், பிளவுஸ் துணி வகைகள் யாவற்றுக்கும் வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

T.P.No 222 2063

# மீள் குடியமர்வைப் பாதிக்காத திட்டம்

# நம்பியாரிடம் அரசாங்கம் கேட்கிறது

## புலிகளின் எதிர்ப்பையடுத்து திருப்பம்

(கொழும்பு)

**அமைதி முயற்சிகளையும், மக்களின் மீள்குடியமர்வையும் பாதிக்காத வகையில் உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள இராணுவ நிலைகளை எவ்வாறு மீள ஒழுங்குபடுத்த முடியும் என்று ஆலோசனை தருமாறு, ஓய்வு பெற்ற இந்திய இராணுவ உயரதிகாரி லெப். ஜெனரல் சதீஸ் நம்பியாரிடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது. முதற்கட்ட அறிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்ததைத் தொடர்ந்து இம்முடிவுக்கு அரசாங்கம் வந்திருப்பதாகத் தெரியவருகிறது.**

நேற்று முன்தினம் கொழும்பு வந்தடைந்த சதீஸ் நம்பியார், சில தினங்கள் தங்கியிருந்து வட-கிழக்கின் பல இராணுவ நிலைகளுக்கும் விஜயம் செய்து, நிலைமைகளை நேரடியாக அவதானிப்பதற்கும் உயர் இராணுவ அதிகாரிகளையும் சந்திப்பதற்கும் தீர்மானித்துள்ளார்.

ஏற்கனவே சதீஸ் நம்பியாரினால் இலங்கை அரசாங்கத்திற்கு முதற்கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த இடைக்கால அறிக்கையில் இராணுவ நலன் சார்ந்த விடயங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில், மீள்குடியமர்வுக்கு நிபந்தனைகளாக நம்பி

(10 ஆம் பக்கம் பார்க்க)



வீதியில் கிடக்கிறது 'கொலம்பியா' விண்கலத்தின் துண்டொன்று.

## விண்ணாணம் விநாசியர்



நம்பியாறர அட்வைஸ் சனத்தை விடவோ, மறிக்கவோ...?

## பிரிட்டிஷ் அதிகாரி அறிக்கையும் கிடைத்த பின்பே இறுதி முடிவு

### அமைச்சர் மிலிந்த மொறகொட கூறுகின்றார்

(கொழும்பு)

பிரித்தானிய இராணுவ அதிகாரி மைக்கல் றோஸிடம் இருந்தும் ஆலோசனையைப் பெற்ற பின்னரே, உயர்பாதுகாப்பு வலய இராணுவ நிலைகளை மீள ஒழுங்குபடுத்துவது தொடர்பான இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார். வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கும் பிரித்தானிய இராணுவ அதிகாரி மைக்கல் றோஸிடம் இருந்து - இராணுவ நிலைகளை மீளமைக்கப்படுதல் தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை ஒன்றினை இலங்கை அரசு எதிர்பார்த்திருக்கிறது.

இவ்வறிக்கை கிடைத்த பின்னர் இந்திய

(10 ஆம் பக்கம் பார்க்க)



மைக்கல் றோஸ்

## நம்பியாரைத் தானும் சந்திக்க விரும்புகின்றார் ஜனாதிபதி சந்திரிகா

இந்திய இராணுவ நிபுணர் சதீஸ் நம்பியாரை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சந்திக்க விரும்புகின்றார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் பிரதமர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரியுள்ளது.

மேற்படி சந்திப்பானது எப்போது நடைபெறும் என்பது தொடர்பாக எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை. (200)

## யாழ்.வரும் நம்பியார் பாதுகாப்பு வலயங்களுக்கு விஜயம் செய்வார்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவ நிபுணர் சதீஸ் நம்பியார் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு வந்தடைந்த இவர்- அமைச்சாகள் மிலிந்த மொறகொட, திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி விட்டு இன்று காலை யாழ். குடாநாட்டுக்கு வருகைதரவுள்ளார்.

யாழ். வருகை தரும் சதீஸ் நம்பியார், பலாலியில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் ஏனைய உயர் இராணுவ, கடற்படை அதிகா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பேர்லின் பேச்சுக்களுக்காக புலிகள் குழு இன்று புறப்படும்

ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெறவுள்ள அடுத்த கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் இன்று கொழும்பு பயணமாகவுள்ளனர்.

இன்று காலை 8.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து உலங்குவானூர்தி மூலம் இக்குழுவினர் புறப்பட்டுச் செல்லவுள்ளனர்.

இதேவேளை- விடுதலைப் புலிகளின்

(10 ஆம் பக்கம் பார்க்க)



திருமலை கோபாலபுரத்தில் அமைக்கப்படும் கடற்படை முகாம் இதுதான். கடற்படை வாகனங்கள் உள்ளே தரித்து நிற்பதையும் காணலாம்.

## வவுனியாவுக்குள் செல்லவிடாது 23 பெண் போராளிகளுக்கு தடை

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளிருந்து ஓமந்தையூடாக வவுனியாவுக்குச் சென்ற 23 பெண் போராளிகள் -இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படாமல் திருப்பியனுப்பப்பட்டனர்.

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் நேற்று இச் சம்பவம் நடைபெற்றது.

பெண்போராளிகளது உடை இராணுவச் சீருடையை ஒத்திருப்பதாகக் கூறியே இவர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்.

இதுபற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் தெரிவிக்கப்பட்டதுடன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டது.

பெண் போராளிகளது உடை மற்றும் இடுப்புப்பட்டி விடயமாக- கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட மட்ட படையினர்-புலிகள் சந்திப்பிலும் படையினரின் நடவடிக்கை பற்றி புலிகள் எதிர்ப்புத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## வட - கிழக்கு படையதிகாரிகளை அனுராதபுரத்தில் சந்தித்தார் ரணில்

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்ட மிகப் பெரிய கூட்டம், வெள்ளியன்று அனுராதபுரத்தில் உள்ள 21 ஆவது டிவிஷன் தலைமையகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். வட-கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இராணுவ, கடற்படை, விமானப் படை அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- சமாதானப் பேச்சுக்கள், இதில் அரசாங்கத்தின் பங்களிப்பு, பேச்சுக்களில் எதிர்நோக்கப்படும் தடைகள், நெருக்கடிகள் குறித்தும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128

## இயந்திரம் சூடானதுதான் விபத்துக்கு காரணம்

# விண்வெளி வீரர்களின் உடற்பகுதிகள் ரெக்ஸாஸ் வயல்வெளிகள், வீதிகளில்!

(ஹொஸ்ரன்)

வெடித்துச் சிதறிய கொலம்பியா விண்கலத்தின் துண்டுகளும் -


வீழ்ந்து கிடக்கும் துண்டொன்று

அதில் பயணம் செய்த விண்வெளி வீரர்களின் உடல் துண்டங்களும் - ரெக்ஸாஸ் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் கண்டெடுக்கப் பட்டு வருகின்றன.

ரெக்ஸாஸ் மாநிலக் குடிமனைகள், வயல் வெளிகள், பெரு வீதிகள் என்பவற்றில் இவை விழுந்து கிடக்கக் காணப்பட்டன.

இவற்றை நாஸா அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர்.

இதேவேளை - உடைந்த துண்டுகளையும், விண்வெளி வீரர்களது சடலங்களைத் தேடியவாறு - அமெரிக்க விமானப்படையின் விமானங்கள் 3,000 அடிக்குக் குறைவான உயரத்தில் பறந்து வருகின்றன.


விண்வெளி வீரரது உடல் துண்டத்துக்கு அஞ்சலி

160 மைல் நீளத்தில் - 40 மைல் அகலத்திற்குட்பட்ட பரப்பில் இத் தேடுதல் வேட்டை நடாத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை - கொலம்பியா விண்கலம் வெடித்தது பற்றிய விசாரணைகளை நாஸா அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரையும் இவ்விபத்துக்களுக்கான காரணம் தெரியாத போதும் தரையிறங்கும்போது விண்கலத்தின் இயந்திரங்கள் அதிக சூடாகியமை காரணமாக இருக்கலாமெனச் சந்தேகம் எழுந்துள்ளது.

## வீரர் ஒருவரது ஹெல்மட் உள்ளூர் வீதியில் கிடந்தது

கொலம்பியாவில் பயணம்செய்த விண்வெளிவீரர் ஒருவரது ஹெல்மட் ரெக்ஸாஸ் மாநிலத்தில் கிழக்கேயுள்ள ஹெம்பில் கிராமத்தின் உள்ளூர் வீதியொன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதனோடு வீரரொருவரது உடற்பகுதியொன்றும் காணப்பட்டது.

இதேவேளை, கொலம்பியா விண்கலம் கடந்த பதினாறு நாட்களுக்கு முன் புறப்பட்ட போதே அதன் இறக்கைப்பகுதி ஒன்று கழன்று வீழ்ந்ததிலிருந்தது. பிரச்சினைகள் ஆரம்பமானதா என நாஸா அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

# கொலம்பியாவின் அழிவு

● கொலம்பியா விண்கலம் தரையிறங்குவதற்கு ஏற்ற காலநிலை நிலவியது. பிரச்சினைகள் ஏதுமில்லையென புளோரிடாவிலுள்ள கென்னடி விண்வெளிமையம் அறிவித்தது. ஜி.எம்.ரி. நேரம் 14.16 க்கு விண்கலம் தரையிறங்கத் தயாரான நேரம் குறிக்கப்பட்டது.


புறப்படமுன் விண்வெளி வீரர்கள்.

● அமெரிக்க நேரம் 08.53 - முதலாவது பிரச்சினைக்கான அறிகுறி தோன்றியது. இடப்பக்க இறக்கையிலுள்ள வெப்ப நிலை உணர்கருவிகள் (Temperature Sensors) செயலிழக்கின்றன.

● இப்போது நேரம் 08.58, மூன்று வெப்ப உணர்கருவிகள் செயலிழந்தன. தரைக்கு இன்னமும் 40 மைல்களே இருந்தன. வேகம் மணித்தியாலத்திற்கு 13,200 மைல்கள் (ஒலியின் வேகத்திலும் 18 மடங்கு). கென்னடி தளத்திலிருந்து 1,400 மைல்கள் தொலைவில் சென்றுகொண்டிருந்த கொலம்பியா விண்கலத்தின் இறக்கைகள் - தரைக்கு 57 பாகையில் சாயத் தொடங்கின.

● 08.59 - தளத்திலிருந்து கொலம்பியாவுடன் தொடர்புகொள்ளப்பட்டு விண்கலத்தின் ரயர்களில் உள்ள அழுத்த வித்தியாசம் அறிவிக்கப்படுகிறது.

● சற்று நேரம் கழித்து 'ரோஜர்..ம்' என்ற சத்தத்துடன் தொடர்பு அறுந்தது.

● கொலம்பியாவிற்கு தொடந்தும் அழைப்புக்கள். பதிலேயில்லை.


அரைக்கம்பத்தில் அமெரிக்கக் கொடி

## நடந்தது என்ன?

● ரெக்ஸாஸில் - பாரிய வெடிச்சத்தம் கேட்கிறது. நீல வானமெல்லாம் கரும் புகைமண்டலம் பரவியது.

● காம்ப் டேவிட் வாசஸ்தலத்தில் ஒய்வெடுத்துக்கொண்டிருந்த அதிபர் புஷ்ஷுக்கு தொலைபேசி அழைப்பின் மூலம் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

● ரெக்ஸாஸ் எங்கும் - விண்கலத்திலிருந்த விண்வெளி வீரர்களைத் தேடி, படைகள் களமிறங்கின. அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இப்போது நேரம் 09.30. விசாரணைகள் தாமதமின்றி ஆரம்பித்தன. எங்கே பிழைத்தது என எல்லோர் மனதிலும் குழப்பம். அனைத்துத் தரவுகளும் சேகரிக்கப்பட்டன.

● நாஸாவின் நிர்வாகி சீன் ஓ கெல்லி - விண்வெளி வீரர்களின் குடும்பங்களுக்கு சூழ்நிலை பற்றி அறிவித்தார். ஜனாதிபதி புஷ், வீரர்களின் குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் தொலைபேசியில் அழைத்து ஆறுதல் கூறினார். நாட்டு மக்களுக்கும் இறுகிய முகத்துடன் உரையாற்றினார்.


**கொமாண்டர் ஹஸ்பண்ட்**
விண்வெளிக் குழுவின் தலைவரான இவருக்கு இது இரண்டாவது பயணம். அமெரிக்க விமானப்படையின் கேணல் தர அதிகாரி.


**வில்லியம் மக்கூல்**
விண்கலத்தின் விமானியான இவருக்கு இது முதல் பயணம். அமெரிக்க கடற்படையின் கொமாண்டர் தர அதிகாரி.



**மைக்கல் அண்டர்சன்**
ரஷ்ய விண்வெளி நிலையமான 'மிர்'ஐ திருத்தியவர்களில் ஒருவர். விமானப்படையின் லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி.


**டேவிற் ப்ரௌன்**
46 வயதான அமெரிக்கக் கடற்படைக் கப்டனான இவருக்கு இது முதலாவது விண்வெளிப் பயணம்.


**கல்பனா சவ்லா**
இந்தியாவில் பிறந்து, அமெரிக்காவில் விமானப் பொறியியலில் கலாநிதிப் பட்டம். 40 வயதான இவருக்கு இது இரண்டாவது பயணம்.


**லோரல் கிளார்க்**
அமெரிக்கக் கடற்படை கொமாண்டரான இவருக்கு இது முதலாவது விண்வெளிப் பயணம். அணியின் இரண்டாவது பெண்.


**இலான் ரமோன்**
இஸ்ரேலின் திறமையான யுத்த விமான ஓட்டி. அந்நாட்டின் முதலாவது விண்வெளி வீரன். லெபனான் யுத்தத்திலும் பங்கேற்றவர்.



**நமது ஈழநாடு வழங்கும்**




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

## MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **"என்.எஸ்.இரத்தினம்"**

06, முதலாம் குறுக்குத் தெரு, வவுனியா.


[ இரத்தினகோபால்ஸின் இணைந்த நிறுவனம் ]

32, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

∴கீரோ ∴கொண்டா மோட்டார் சைக்கிள்களின் வவுனியா விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு.- 15,000

மூன்றாம் பரிசு - 10,000



வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**


531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



**இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!**
**வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!**



## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (...................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (...................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (...................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (...................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (...................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

**'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'**
**நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.**

பெயர்: ------------------------------------------------

வயது: ------------------------------------------------

முகவரி: ------------------------------------------------

------------------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# சட்ட ரீதியாகவே புலிகளின் பொதிகள் கட்டுநாயக்காவில் சோதனையிடப்பட்டன

## கொழும்பு ஊடகங்களின் திரிபுக்கு நிலையப்பணிப்பாளர் பதில்

(கொழும்பு)

தாய்லாந்தில் நடந்த நான்காவது சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொண்ட புலிகளின் பிரதிநிதிகள், திரும்பி வரும்போது அவர்களின் பயணப் பொதிகள் சோதனையிடப்படவில்லை என 'சண்டேரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருப்பதை கட்டுநாயக்க விமான நிலையப் பணிப்பாளர் காமினி அபேரட்ண மறுத்துள்ளார்.

கடந்தமாதம் 11ஆம் திகதி புலிகள் கட்டுநாயக்கா விமானநிலையம் ஊடாக திரும்பியபோது, அவர்கள் கொண்டுவந்த பயணப்பைகள் சுங்க அதிகாரிகளால் என் முன்னிலையிலேயே சோதனையிடப் பட்டன.

இதையடுத்தே, அவர்கள் விமான நிலைய ஹோட்டேலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். புலிகளின் பிரதிநிதிகளது பொருட்கள் அனைத்தும் எனது பொறுப்பிலேயே இருந்தன.

அவர்கள் கிளிநொச்சிக்கும், மட்டக்களப்புக்கும் புறப்பட்டுச்செல்லும் போது மேலதிகமான பொருட்களை எனது வீட்டில் பத்திரமாக வைத்திருந்துவிட்டு பின்னர், கடந்த 15ஆம் திகதி சிறான் கூட்டத்துக்கு அதிகாரிகளை ஏற்றிச்சென்ற ஹெலி மூலம் இப்பொருட்களை புலிகளிடம் சேர்ப்பித்தேன்.

தாய்லாந்திலிருந்து புலிகள் கொண்டுவந்த பொருட்கள் அனைத்தும் எனது பொறுப்பிலேயே இருந்தன. அத்துடன் புலிகளின் பயண ஒழுங்குகள் அனைத்தையும் நானே நேரில் கவனித்து வந்தேன்.

சோதனையிடப்படாமல் புலிகளின் பயணப்பைகள் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டதான குற்றச்சாட்டுக்கு இடமே இல்லையென-

விமானநிலையப் பணிப்பாளர் காமினி அபேரட்ண மேலும் தெரிவித்துள்ளார்.

(01)

## கண்ணி வெடி அகற்றும் பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

கண்ணிவெடி அகற்றுவது தொடர்பாக விசேட பயிற்சி நெறி ஒன்று மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் கிளிநொச்சியில் நடத்தப்பட்டு வருகின்றது.

இப் பயிற்சித் திட்டத்தில் சுமார் 100 பயிற்சியாளர்கள் இணைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

## யுத்கார்மல் அணி வலைப்பந்தாட்டச் சம்பியன்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் முதற்கட்டமாக கடந்த 11ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் யுத்கார்மல் விளையாட்டு கழக அணி இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

# முஸ்லிம் தனி அலகை அரசு - புலிகள் கருத்திலெடுக்காதது ஆபத்தானது!

## அட்டாளைச்சேனையில் ஹக்கீம் எச்சரிக்கை

(அம்பாறை)

தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இனப்பிரச்சினைக்கான நியாயங்களை நிரூபிப்பது மட்டுமல்ல, யுத்தத்திற்கான நியாயங்களையும் நிரூபிக்கக்கூடும்.



-என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற 'சமாதான முனைப்புக்களில் முஸ்லிம்களின் நிலை' என்ற இருநாள் கருத்தரங்கின் ஆரம்ப உரையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்- அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், முஸ்லிம்களுக்கான தீர்வு மட்டுமல்ல, எமக்குரிய பாதுகாப்பும் விடுதலைப்புலிகளாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கான தீர்வு மற்றும் பாதுகாப்பு விடயங்களில் முஸ்லிம்களை 'தனியானதொரு அலகாக' கருத்தில் எடுக்காதது முக்கியமானது அல்ல. மாறாக இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணைந்து முஸ்லிம்களுக்கான தனி அலகினைப் பற்றி அக்கறை எடுக்காததுதான் மிகவும் அபாயகரமானது.

இதற்காக நியாயபூர்வமான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.(8)

# நெதர்லாந்து 117 மில்லியன் ரூபா மீளக்குடியமர்வோருக்கு உதவி!

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் மிளக்குடியேறும் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கும் வகையில் நெதர்லாந்து 117 மில்லியன் ரூபாவை வழங்கியிருக்கின்றது.

மீளக்குடியேறும் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவு போதுமானதாக இல்லாததாலும் அதனை அதிகரிக்கும் வகையிலும் இந்நிதியுதவி வழங்கப்பட உள்ளதாக வடக்கு -கிழக்கு சமுதாய மீளளிப்புத் திட்ட அதிகாரி புவனேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி வவுனியாவில் மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. முன்னர் 15 ஆயிரம் ரூபாவீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டு வந்தது. எனினும் மீள்குடியேறும் குடும்பங்களின் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு இந்தத் தொகை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இராணுவ அதிகாரிகளைக் கொலை செய்ய புலிகள் பாதாள உலகின் உதவி கோரினராம்!

## 'திவயின' பத்திரிகை கூறுகிறது

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் முததலப், கப்டன் சாகுல் ஹமீட் நிலாம் ஆகியோரை கொலைசெய்வதற்கு விடுதலைப்புலிகள் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு 50 இலட்சம் ரூபா கொடுத்துளளனர் என்று 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இரு இராணுவ அதிகாரிகளும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைளை நன்கு திட்டமிட்டு செயற்படுத்துபவர்கள் எனவும்,

மேஜர் ஜெனரல் முத்தலிப் தற்பொழுது வன்னிப்பிரதேசத்தில் கடமையாற்றி வருவதாகவும், இவர் விடுமுறையில் கொழும்பு திரும்பும்போது இவரைக் கொலை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் 'திவயின' தெரிவித்துள்ளது.

தம்மைச் சம்பந்தப்படுத்தாது பாதாள உலகக் கோஷ்டியினருக்கு பணம் கொடுத்து கொலை செய்யப் புலிகள் தீர்மானித்துள்ளனர் என்றும் 'திவயின' மேலும் தெரிவித்துள்ளது.

(க)

# தமிழக – இலங்கைத் தொடர்புகள் கடலோரப் படையால் தடுக்கப்படும்!

## இந்திய வைஸ் அட்மிரல் சுரேஷ் மேத்தா

(கொழும்பு)

இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வருவதால் இலங்கைக்கும் - தமிழகத்துக்கும் இடையிலான இரகசியமான கடல் வழித் தொடர்புகள் அதிகரிக்கலாம் என இந்தியக் கடலோரக் காவற் படையின் இயக்குநர் வைஸ் அட்மிரல் சுரேஷ் மேத்தா தெரிவித்துள்ளார்.

கடல் வழியான தொடர்புகள் அதிகரிக்கலாம் என்பதால் கடந்த ஒருவருடமாக தமிழகக் கரையோரத்தில் பாதுகாப்புப் பணிகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்த அவர்-

அண்மையில் இலங்கையின் வடக்குப் பகுதியிலிருந்தான நான்கு கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

# முதலில் தென் மாகாணசபை பின்னர் ஊவா, சப்பிரகமுவ

## தேர்தலுக்கு திட்டமிடுகிறார் ஜனாதிபதி

தென்மாகாண சபையை மட்டுமன்றி ஊவா, சப்பிரகமுவ மாகாண சபைகளையும் கலைத்து விட்டு தேர்தலை நடாத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டு வருகின்றார்.

முதற்கட்டமாகத் தென்மாகாண சபையைக் கலைத்து விடுவதற்கும் அதையடுத்து சப்பிரகமுவ, ஊவா மாகாண சபைகளையும் கலைத்து விட்டு - குறித்த காலத்துக்கு முன்னரே தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்தேர்தல்களில் வெற்றி கிடைத்தால் - உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தவும் ஜனாதிபதி திட்டமிட்மிட்டிருக்கிறார்.

1993ஆம் ஆண்டில் தென்மாகாண சபைத்தேர்தலில் தான் பொ.ஐ.முவுக்கு முதலாவது வெற்றி கிடைத்தது என்பதால் தென்மாகாண சபைக்கு முதலில் தேர்தலை நடாத்துவதற்கு சந்திரிகா முயற்சி செய்து வருகிறார்.

இது குறித்து தகவல் வெளியிட்ட ஜனாதிபதியின் பேச்சாளர் ஒருவர்- 1993ஆம் ஆண்டைப்போல வரலாறு மீண்டும் திரும்பும் எனத்தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தலுக்கு தயாராகி வரும் பொ.ஐ.முவின் நகர்வுகளைத் தாம் அவதானித்து வருவதாகவும், இதற்கு மாற்றான நகர்வுகள் தம்மால் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

## பாலியல் வல்லுறவு முயற்சி;

# இரண்டு இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டனர்

(வவுனியா நிருபர்)

வவுனியா கணேசபுரத்தில் பெண்ணொருவரைப் பாலியல் வல்லுறவு முயற்சிக்குட்படுத்த முயன்ற சம்பவம் தொடர்பாக இரு இராணுவத்தினரைப் பாதிக்கப்பட்ட பெண் அடையாளம் காட்டினார்.

கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு வீட்டில் இருந்த கணவனையும் சகோதரனையும் தாக்கிவிட்டு இராணுவத்தினர் சிலர் குறித்த பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்தபோது அயலவர்கள் கூடியதையடுத்து தப்பியோடியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில்- அதிகாரி உட்பட 15 பேர் ஈடுபடுத்தப்பட்டபோது, அவர்களில் இருவரை அந்தப் பெண் அடையாளம் காட்டினார்.

இனங்காணப்பட்ட இரு இராணுவத்தினரும் நீதிமன்றத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.



சாவகச்சேரிப் பகுதியில் 2000ஆம் ஆண்டு நடந்த யுத்தத்தின் போது அங்குள்ள வர்த்தக நிலையங்களிலிருந்து புலிகளால் மீட்கப்பட்ட சொத்துக்கள் மீளக் கையளிக்கப்பட்ட நிகழ்வில் நிதிப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் சிவநாத் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# புனரமைப்புப் பணிகள் முடிவடையாமல்

# யாழ்.பொதுநூலகத்தைத் திறக்க முயற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தின் புனரமைப்புப் பணிகள் முழுமையாக முடிவடையாத நிலையில் - அரசியல் காரணங்களுக்காக அதனைத் திறக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதியுடன் யாழ். குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் முடிவடையவுள்ளது. இதற்கு முன்னர் நூலகத்தைத் திறந்து தமது பெயரைப் பொறித்துக் கொள்வதற்காக மாநகரசபை பெருமுயற்சி எடுத்து வருகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி பொது நூலகம் திறக்கப்படும் என யாழ். மாநகர மேயர் செ.கந்தையன் அறிவித்திருந்தார்.

ஆனால் நூலகக் கட்டடத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்ய மேலும் 23 மில்லியன் ரூபா தேவை எனத் தெரியவருகின்றது. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் இதுவரை செய்யபபடவில்லை.

புனர்வாழ்வு அமைச்சும் நூலகத்துக்கு நிதி ஒதுக்கத் தம்மிடம் நிதி கையிருப்பில் இல்லை என அறிவித்திருக்கிறது. இந்த நிலையில் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமலேயே நூலகத்தைத் திறக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

நூலகத்திற்கான சிற்றுண்டிச்சாலை அமைப்பு, மின் உயர்த்தி (லிப்ட்) வசதி, இரு கட்டடங்களை இணைக்கும் பாதைக்கான கூரை என்பன அமைக்கப்படாமல் இருப்பதோடு, ஜெனரேற்றரும் பொருத்தப்படவில்லை. 80 சதவீதமான தளபாட வேலைகளே பூர்த்தியாகியுள்ளன.

இதேவேளை, தற்போது நூலகப் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டுவரும் கட்டடத் திணைக்களம், இம்மாதம் 30 ஆம் திகதியே நூலகத்திற்கான தீயணைப்பு, குளிரூட்டிக் கருவிகளைப் பொருத்த முடியும் என அறிவித்திருந்தது.

புனரமைப்புப் பணிகள் முழுமையாகாமல் நூலகம் திறக்கப்படுவதால் எஞ்சியுள்ள 23 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நிதி கிடைக்காமல்போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(க,லி,ச)

# கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு விசேட சம்பள உயர்வு கிடைக்கும்

## கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கிறது

(கொழும்பு)

தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு ஏதுவாக - கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் வகையில் மேலதிக சம்பள உயர்வை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் கல்வி, பண்பாட்டு அமைச்சு மேற்கொண்டிருக்கிறது.

இதன் பிரகாரம் 11.12.1998 முதல அதி கஷ்டப் பிரதேச பாடசாலைகளில கடமையாற்றும் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.

அதி கஷ்டப்பிரதேச ஆசிரியர்களின் சம்பள உயர்வைக் கணிப்பிட்டு, நிறுவனத்துடன் சம்பள உயர்வை வழங்குவதற்கு தேவையான நிதியினை சகல மாகாண சபைகளுக்கும் உடன் வழங்க நிதி ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# மீளக்குடியமர்வோரைப் பயன்படுத்தி மாடுகளைக் கடத்துகின்ற தரகர்கள்

(நமது நிருபர்)

வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மீளக்குடியேறுவோரைப் பயன்படுத்தி, மாட்டுத் தரகர்கள் மாடுகளை வன்னியிலிருந்து கொண்டுவந்து இறைச்சிக்காக விற்று வருவதாகத் தெரியவருகிறது.

வன்னியிலிருந்து இறைச்சிக்காக கால்நடைகளை வெளியில் கொண்டு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருகின்றது. எனினும், வன்னியிலிருந்து மீளக்குடியமர யாழ்ப்பாணம் வருவோர், தமக்குச் சொந்தமான மாடுகளையும் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டிருகின்றது.

இதனைப் பயன்படுத்தி மாட்டுத் தரகர்கள் சிலர், மீளக்குடியமர்வோரைப் பயன்படுத்தி மாடுகளைக் கடத்தி வருகின்றனர். இவ்வாறு குடாநாட்டுக்குள் கொண்டு வரப்படும் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

பசுமாடுகள் மற்றும் வன்னியில் உழவுக்குப் பயன்படுத்தப்படும் காளைகளும்கூட இவ்வாறு கொண்டு வரப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுவதாகவும், இதனால் வன்னிப்பகுதியில் மாடுகள் குறைவடைந்து வருவதாகவும் தெரியவருகின்றது.

### இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 21 வயதிற்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றியீட்டியுள்ளது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும்-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் 1:1என்ற கோல்களின் அடிப்படையில் சமநிலையில் இருந்தன. பின்னர் வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் எந்த அணிகளும் கோல் எதனையும் போடாததால், இறுதியாக வழங்கப்பட்ட தண்டனை உதையின் மூலம் 5:4 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

(41)

### குறைந்த விலையில் இந்தியாவிலிருந்து கோதுமைமா

மாவின் விலையைக் குறைக்கும் முகமாக இந்தியாவிலிருந்து ஒரு தொகுதி மாவை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மா, இலங்கை முழுவதும் கிலோ 19 ரூபாவுக்கு விற்கப்படும் என்றும், பிரிமா மா விற்கும் விலையிலும் இது 25 சதவீதம் குறைவாக உள்ளது என்றும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வட-கிழக்கு பகுதிகளுக்கு எட்டு அம்புலன்ஸ் வண்டிகள்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கென எட்டு அம்புலன்ஸ் வண்டிகளை சுகாதார அமைச்சர் பி.தயாரதன கொழுமபில் வைத்துக் கையளித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டிகள் போதாமை உள்ளதாக அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதனை அடுத்து சுகாதார அமைச்சர் இந்த அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கியுள்ளார். இந்த எட்டு அம்புலன்ஸ் வண்டிகளும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்ற விகிதத்தில் வழங்கப்படவிருக்கின்றன.

மாகாண சுகாதார செயலாளர் ரதனாயக்க, வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை ஆகியோர் அம்புலன்ஸ் வண்டிகளைப் பொறுப்பேற்றனர்.

# ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து ஐந்து மாணவர்

(கொழும்பு)

ஆசிய, பசுபிக் பிராந்தியச் சிறுவர் மாநாடு அடுத்த யூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டிற்குச் செல்வதற்கு எட்டு இலங்கை மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐந்து சிங்கள மாணவர்களும், இலங்கைத் தமிழ், முஸ்லிம், இந்திய வம்சாவழித் தமிழ் மாணவர்-தலா ஒருவர் வீதமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழர் சார்பில் மட்டக்களப்பு மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மாணவி தெரிவு செய்யப்பட்டார்.

இந்த மாணவர்கள், நடந்து முடிந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதியுயர் புள்ளிகளைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 8

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### சிறுநீர்ப் பரிசோதனை பல முறைகளில் செய்யப்படுகிறது

(1) *பெனடிற் கரைசல் பரிசோதனை*

5 ml பெனடிக்ற் கரைசலுடன் 8 துளி சிறுநீரைச் சேர்த்துக் கொதிக்க வைக்கும்போது ஏற்படும் நிறமாற்றத்தை அடிப்படையாக வைத்துக் குளுக்கோஸின் அளவு பின்வருமாறு கணிக்கப்படும்.

| *கொதித்தலின் பின் காணப்படும் நிறம* | *குளுக்கோஸின் அளவு* |
|---|---|
| நீலம் | இல்லை |
| பச்சை | சிறிதளவு |
| மஞ்சள் | அதிகம் |
| செங்கட்டிச் சிகப்பு | மிக அதிகம் |

(2) *சிறுநீர் சோதனைக் குளிசைப் பரிசோதனை -*

சிறுநீருடன் புறவெப்பத்தாக்கமடைந்து, அதன் வெப்பத்தைக் கொதி நிலைக்கு உயர்த்தத்தக்க இரசாயனப் பொருட்கள் கலந்த (CLINI TEST) குளிசைகள் சிறுநீர் சோதனைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. சோதனைக் குழாய் ஒன்றினுள், குளிசைத் தயாரிப்பாளர் குறிப்பிட்ட அளவு சிறுநீரை எடுத்து, அதனுள் சிறுநீர்ச் சோதனைக் குளிசை ஒன்றைப் போட்டவுடன் சிறுநீர் கொதித்து, அதிலுள்ள குளுக்கோஸின் அளவை நிறமாற்றம் மூலம் காட்டும்.

3) *குளுக்கோஸ் காட்டும் சிறுநீர் தோய்கீலப் பரிசோதனை :*
**(GLUCOSE DIP STRIP TEST)**

குளுக்கோஸுடன் தாக்கமுறும்போது நிறமாற்றமடையும் இரசாயனப் பொருட்கள் தோய்த்த பஞ்சு ஒட்டப்பட்ட பிளாஸ்டிக் கீலங்கள், டப்பிகளில் அடைத்து விற்கப்படுகின்றன. இந்த டப்பிகளின் ஓரத்தில், சலத்தில் தோய்க்கும்போது கீலத்தில் ஒட்டப்பட்டுள்ள பஞ்சில் ஏற்படும் நிறமாற்றங்கள் காட்டும் குளுக்கோஸின் அளவுகள் குறிப்பிடப்பட்டிருக்கும். குளுக்கோஸ்காட்டும் சிறுநீர்தோய்கீலம் **(GLUCOSE DIP STRIP)** ஒன்றை எடுத்துச் சிறுநீரில் தோய்த்து, 1/2 நிமிடத்தின் பின், கீலத்திலிருக்கும் பஞ்சில் ஏற்பட்ட நிறமாற்றத்தை அவதானித்துக் குளுக்கோஸின் அளவு தீர்மானிக்கப்படும்.

சிறுநீர்ப் பரிசோதனையின்போது ஏற்படும் நிறமாற்றம் குளுக்கோஸினால் மாத்திரமன்றி அஸ்பிறின், விற்றமின் சீ போன்ற மருந்துகளைப் பயன்படுத்திய வேளைகளில், சிறுநீரில் காணப்படும் அந்த மருந்துகளாலும் ஏற்படலாம். மற்றும் கருவுற்றிருத்தல் போன்ற சில சந்தர்ப்பங்களில் சிறுநீரகத்தின் வடிதிறன் **(RENAL THRESHHOLD LEVEL)** மாற்றமடைவதால் அதிக குளுக்கோஸ் சிறுநீருடன் வெளியேறலாம். இக்காரணங்களால் சிறுநீர்ப் பரிசோதனை நீரிழிவைத் துல்லியமாகக் காட்டும் பரிசோதனை எனக்கொள்ள முடிவதில்லை.

(தொடரும்)


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில் HAPPY BIRTHDAY




பெயர் :ச.விதுசா
முகவரி: கேணியடி வடக்கு, தெல்லிப்பளை.



ஏழாவது அகவையில்



பெயர் :கே.கீர்த்தனா
முகவரி: கல்வயல், சாவகச்சேரி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# பிரதிபலிப்பான்கள் பற்றி மேலும் சில

பிரதிபலிப்பான்களின் முகத்தில்
இல்லையொரு புதுப் புன்னகை
இல்லையொரு புதுமொழி
இல்லையொரு புதுக்குரல்
இல்லை யெந்தப் புதிதும்
உண்மையும்.

இல்லை யென்றும்
பிரதிபலிப்பான்களுக்குச்
சொந்த முகமும்
ஓரிதயமும்.

நீ அவனைப் பிரதிபலிக்கின்றாய்
அவன் அவரைப் பிரதிபலிக்கின்றான்
அவர் பிரதிபலிக்கவும் ஒருவரிருக்கிறார்
உன்னை இவன் பிரதிபலிக்கின்றான்
கடவுளே!
இவனைப் பிரதிபலிக்காதிருக்கட்டும்
ஒருவரும்.

பிரதிபலிப்பான்களின் சம்பாசனையில்
ஒளிந்திருக்கிறது கபடத்தின் சர்ப்ப நிழல்
பிரதிபலிப்பான்களின்
செயல்களிலில்லைச் சுயமும் துளிர்ப்பும்
பிரதிபலிப்பான்களிடம் எப்போதுமிருப்பதில்லை
அன்புக்கும் நட்புக்குமான
அந்தரங்கமும் வெளிப்படையும்.

ஒரு நாறும் புண்ணை
ஒவ்வொரு பிரதிபலிப்பான்களும்
வைத்துக் கொண்டிருக்கிறார்கள்
இதயமென்று
அதில் நெளிகின்றன
புழுத்த பொய்கள்.

பிரதிபலிப்பான்களிடமிருந்து
நழுவிக்கொண்டிருக்கிறது
நிகழ்காலத்தின் மூச்சும்
எதிர்காலத்தின் விதையும்.


கருணாகரன்

# A-9 னை நீளும் நினைவுகள்


பகுதி பதினேழு

முற்றுகைச் சமர் மூண்டு வெடித்தது
முனைகள் எங்கும் மரணம் முளைத்தது
கற்சிலைகள் போல் வேட்டு மழையூடு
கடந்து கோட்டை மதிலில் நிமிர்ந்தனர்...
பற்றறுத்தவர் போன்ற மறவர்கள்.
பணயமாய் உயிர் வைத்த படையினர்
நெற்றி முட்ட எதிர்த்துக் களைத்தனர்.
'நிலை' குலையுமுன் பின்வாங்கிப் போயினர்.

சோழரின் கொடி கோட்டையின் வாசலில்
சுடரென அசைந்தாடிற்று; சாய்ந்திட்ட
யாழ் எழுந்துமே தானாய்ச் சுதிமீட்டத்
தருணம் வந்தது; புதைந்து கிடந்தெங்கள்
காலைக் கேட்கும் மிதிவெடி யாவையும்
களையெடுக்கவே 'பட்டன'. யாழ்நகர்
வேலி மீறிய வெள்ளாடு போல்... கோட்டை
வீதியெங்கணுந் துள்ளித் திரிந்தது.



கோட்டை பார்ப்பதும், கோட்டையை ஆண்டவர்
குறுகலான வளையூடு தப்பிய
ஓட்டை பார்ப்பதும், உயர்ந்த மதில்களில்
உலவி, விடுவிக்கப்பட்ட 'கடற்காற்றைப்'
போட்டி போட்டுச் சுவாசித்து மீள்வதும்,
பொழுது போக்குகள் ஆச்சு! யாழ்...மாநகர்
வாட்டம் மாள... வசந்தம் துளிர்த்தது.
வான ஊர்திகள் வாலைச் சுருட்டின.. -ஜெயங்கொண்டான்




# ஞானம் கலை இலக்கிய இதழ் (32)




இன்னும் தொடர்கின்றது ஞானம் கலை இலக்கிய இதழ். இதன் தொடர் வருகை மகிழ்வையும், நிறைவையும் தருகின்றது.

சிற்றிலக்கிய இதழ்கள் தொடர்ந்தும் வருகின்ற நிலைமை என்பது பகீரதப் பிரயத்தனம்தான். இதில் பெரும் இடர்களை ஆசிரியர் சந்திக்கவேண்டும். இரண்டு இடர்கள் உண்டு. ஒன்று- பொருளாதாரப் பின்புலம். இரண்டு- தரமாகத் தொடர்ந்தெழுதும் படைப்பாளிகள். இவற்றைப் பேணி இலக்கிய இதழைத் தொடர்ந்து நடத்துவது போற்றுதலுக்குரியதுதான்.

முப்பத்தி இரண்டாவது இதழில் ஆரோக்கியமான வளர்ச்சி தெளிவாகத் தெரிகின்றது. ஆக்கங்களில் தரம் பேணப்பட்டு, அழகியல் உணர்வும், ஆழ்ந்த அனுபவமும் வெளிப்பட "ஞானம்" வாசகனுக்கு திருப்தி தரும் இதழ் என்பதில் மறுப்பில்லை.

இந்த இதழ் நிறைய விடயங்களைத் தாங்கிவர, செங்கை ஆழியான் "ஈழத்து இலக்கிய நம்பிக்கைகள் I" என்ற எண்ணத்தில் இளம் படைப்பாளி உடுவில் அரவிந்தனை அறிமுகம் செய்திருக்கின்றார். இது தொடரும்போலத் தெரிகின்றது.

மற்றப்படி சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நூல் விமர்சனம், நூலகம் எனப்பல விடயங்கள் உண்டு.

கவிதைகளில் தே.சங்கீதாவின் "வாழ்க்கையின் மர்மம்" எனும் கவிதை நிறையச் செய்திகளைக் கொண்டதாக இருக கின்றது. அத்துடன் கவிதைக்குரிய அழகியலை இயல்பாகப் பெற்ற கவிதை.

நூல் அகம்

வல்லிக்கண்ணன், வரதர் ஆகிய இருவரையும் பற்றிச் சோமகாந்தன் எழுதி இருக்கும் பத்திகள் ஆரோக்கியமான பணி.

இரு சிறுகதைகள் உண்டு. செங்கையாழியானின் கதை, வழமையாக அனுபவங்களைச் சித்திரிக்கும் தன்மையைக் கொண்டது.

கனகசபை தேவகடாட்சத்தின் சிறுகதை, கௌதம புத்தரின் துறவறத்தைப் பற்றியது. ஏற்கனவே கையாளப்பட்ட கரு, நாம் நன்கறிந்த விடயமும்கூட. மீளவும் வாசிக்க சலிப்புத் தட்ட முனைகின்றது.

மேலும் பல விடயங்களாக, நெற்றிக்கண் எனும் பரப்பில் நூல்விமர்சனம் உண்டு. கடிதங்கள், நூலகம் எனப்பல பகுதிகளும் காணப்படுகின்றது.மொத்தத்தில் ஆரோக்கியமானதும், ஆழ்ந்த கலை உணர்வைத் தரும் சஞ்சிகையாகவும் கொள்ள வேண்டியது ஞானம்.

-பல்லவன்

# ஆர்கொலோ சதுரர்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

அண்மையில் நாடக அரங்கக் கல்லூரியின் உருவாக்கத்தில் கைலாசபதி கலையரங்கில் ஒரு நடனநாடகம் அரங்கேறியது. மணிவாசகரின் திருவாசகத் தொடரொன்றை பெயராகப் பெற்ற அந்த நடனநாடகம் ஒரு கூட்டு முயற்சியாகப் புதிய கலை முயற்சியாக விளங்கியது. நாடகம் மக்கள் வாழ்வியலை எடுத்துக்காட்டும் ஒரு கலை வடிவம் என்பதை நன்கு உணர்த்தியது. நடன ஆசிரியை சாந்தினி சிவனேசன் தனது நடன நெறியாள்கையால் காலத்தின் தேவையை உணர்ந்து செயற்பட்டுள்ளார். கவிஞர் முருகையன் கவிதையும், மகாகவி பாரதியின் பாடலும், வில்லிபுரத்தூரர் செய்யுளும், இசையாக ஆடல் ஒருங்கிணைய இரண்டு மணிநேரம் பார்வையாளர் ஒன்றிப்போயிருந்த அற்புதம் இக் கூட்டுருவாக்கத்தின் தேவையை நிறைவேற்றியுள்ளது.

பண்டைய கதையான பாரதப் போரின் பதின்மூன்றாம் நாள் போர் நிகழ்வுகளை அடித்தளமாக்கி, அதன மேல் இன்றைய மக்களின் உள்ளத்திலே இருந்து வெளிவரும் கேள்விக்கணைகளுக்கு விடை கூற முனையும் முயற்சியே இந்த நடன நாடகத்தின் இலக்காக, காலத்தின் தேவையை நிறைவேற்றும் பணியாக அமைந்துள்ளது. பாரதப் போரின் பதின்மூன்றாம் நாள், போர் இளையவீரன் அபிமன்யுவின் வீரத்தைக் காட்டுகின்றது. அந்த வீரத்தின் வெளிப்பாட்டை முன்னிகழ்வுகளால் விளக்கும் நடன அமைப்பு பாரதக் கதையை நன்கு விளக்க நாடகம் வளர்கிறது. அது இன்றைய தலைமுறையினருக்கு வாழ்வியலை நன்கு விளக்க, ஒரு கைவிளக்காக நின்று ஒளிதந்தது. நாடகமாந்தரின் நினைவலைகளை நடனமூலம் . காணும்போது உள்ளத்தில் புதியதொரு ஆய்வுமுறை உருவாக்கப்படுகிறது. இது ஏன் நடந்தது என்று கலங்குவோருக்கு ஒரு நல்ல உளப்பயிற்சியை அறிமுகம் செய்துள்ளது. கலைப்படைப்பு உளச்சிதைவைச் சீர்செய்யும் ஒரு மருந்தாகவும் அமையும் என்ற உண்மையை இந்நாடகம் எடுத்துக்காட்டுகிறது. எமது நினைவலையில் நீந்தி, நடந்தவற்றை எண்ணிப் பார்த்து, நடப்பவற்றைத் தெளிந்து கொள்ள வேண்டும் என்ற செய்தியை இந்த நாடகம் சமூகத்திற்குச் சொல்லித்தர முன்வந்துள்ளது.

மூன்று தலைமுறைகள் ஒன்றாக வாழும் மக்கள் வாழ்வியலில் சமநிலை இருக்க வேண்டும். அதனைப் பாண்டவரும் கௌரவரும் போரிட்டபோது உணர்ந்தார்கள். கிருஷ்ணனின் அறிவுரை வாழ்க்கையின் போக்கை உணர்த்தியது. மரணபயத்தை தெளிவுபடுத்தியது. ஆனால், இன்று அதனை உணரும் அறிவாற்றல் பெற்றவர் மிகச் சிலரே. இன்று இத்தகைய கூட்டு வாழ்க்கை குலைந்து விட்டது. அது நடப்பு நிலைகளை விளங்கிக்கொள்ள துணையற்ற தனிமை வாழ்வு நடத்துவோருக்கு உளச் சுமையாக உள்ளது. இந்தச் சுமையை இறக்கி வைத்து வழிநடக்க ஆர்கொலோ சதுரர் வழிகாட்டுகிறது.



யுத்த களத்திற்கு விரையும் அபிமன்யுவும், சுமந்திரனும்

நடன நாடகத்தின் உருவாக்கம் ஏறக்குறைய நாற்பது பேரின் நல்ல உழைப்பால் நிறைவேறியுள்ளது. அபிமன்யுவின் நடனம் நாடகத்தில் சோகத்தை நிரப்ப, அதன் வழியே சென்று பாண்டவர் வரலாறு அறிய அவா ஏற்படுகிறது. பாடல்கள் இசைவழிநின்று பார்ப்போரின் செவியை நிறைக்கின்றன. நடன அமைப்பில் பத்மவியூகம், ஏனைய போர்க்காட்சிகள் எமது மண்ணில் நடந்தபோரை நாம் நினைக்க வைக்கின்றன. முதியோர் வஞ்சினம் இளையோர் பகைவெல்ல முடியாமல் தடுப்பதை பாரதம் சொன்னது. அதனை நடனமும் இசையும் மேடையிலே தெளிவாகப் புலப்படுத்தின. பாடலில் வரும் சிலசொற்கள் எமது அனுபவப் போரின் போது நாம் கேட்டசொற்கள்.

அபிமன்யு இளைய தலைமுறையினருக்கு ஒரு எடுத்துக்காட்டு. குருவையும் தந்தையையும் வழிபட்டுச் செயலாற்றும் இளைஞன். அவன் குணநலன்கள் இன்றைய இளைஞரிடமும் இருக்கவேண்டும். இதுவே இந்த நாடகம் இளைஞர்க்குச் சொல்லும் செய்தி. தொடர்ந்து தொய்வடையாமல் நாடகம் மேடையில் நடந்தமை பார்வையாளரை இருக்கைகளில் இறுதிவரை அமர்த்தி வைத்திருந்தது. நாட்டார் பாடல் ஒன்று நயமாக இணைந்து எல்லோரையும் நினைவலைகளில் மிதக்கவைத்தது. பாடல்களைப் பாடியவர்கள் குரல்நயம் ஒலியமைப்பு நிலையில் சீர்குலைந்த ஓரிரு சந்தர்ப்பங்கள் இனிவரும் மேடைகளில் தவிர்க்கப்பட வேண்டியவை. நடன ஆடைகள் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். நிறங்களின் தேர்வு நாடகப் பொருளுடன் ஒத்தியைந்திருந்தது. எளிமையான ஆடைகள் சிறப்பாக நாடக மாந்தரின் குணவியல்பைத் தெளிவுபடுத்தின. மேடையில் ஒற்றைச் சதங்கை ஒன்றுமட்டுமே கழன்றது. நாடக ஆரம்பத்தில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் முன்னுரை தேவையானதாக தலைமுறைக் கையளிப்புச் செய்யப்பட வேண்டிய பாங்கை உணர்த்தியது. நாடக அரங்கக் கல்லூரி ஒரு புதிய வழியைக் காட்டியுள்ளது. குறிப்பாகச் சொன்னால், இன்று கலை எதை, எப்படி மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்பதை மூத்தவராகிய குழந்தை சண்முகலிங்கம் மூன்று தலைமுறைகளின் கூட்டாக நின்று கூறியுள்ளார். இது ஒரு சிறந்த தலைமுறைக் கையளிப்பு என்பதில் ஐயமில்லை.

# மண் குடிசை

## சிறுகதை

### யோ.கர்ணன்

ஏகாந்தம்... ஏகாந்தி என மனிதர்கள் சொல்லிக் கொள்கிறார்களே, அந்த நிலையிலிருப்பவரைப் பார்த்து அல்லது அந்த நிலையிலிருந்திருக்கிறீர்களா?

நான் இப்போது அந்த நிலையில்த்தானிருக்கின்றேன்.

என்னுடனிருந்தவர்களனைவரும் இல்லாமல்ப்போய் இன்று தனிமையிலிருக்கின்றேன்

உலகம் நிறைந்த மக்களிருந்தும் சிலரை அநாதை என்கிறார்களே, இப்போது நானும் அதிலொருவன்.

சொல்லிக் கொள்ளத்தக்க சொந்தமென்று யாருமில்லை.

முன்வீதியில் வாகனங்களும், அவற்றுள் மனிதர்களும் பயணம் செய்கிறார்கள்தான்.

ஆயினும், அவர்களுடன் எனக்கு ஒட்டுதல் இல்லை. 'விறுமன்' எனச் சொல்வார்களே, நானும் அந்த இரகம்தான். நானாகச் சென்று யாருடனும் கதைப்பதில்லை. அவர்கள் வந்து என்னுடன் கதைத்தால்தான் உண்டு. அவர்கள்தான் அதனைச் செய்வதில்லையே.

சற்றுத் தள்ளியிருக்கும் காட்டு மரங்களும்... அதில் இழைந்து வரும் காற்றும்தான் எனக்கு ஆதரவு. கிளைகளினூடாக தவழ்ந்து வரும் காற்று என்னை ஆதரவாய் வருடிப்போகும்.

இவற்றை விட்டால் வேறொரு உறவும் கிடையாது. உறவுகளிழந்து, ஏகாந்தியாய் உயிர் வாழ்கின்றேன். வாழ்வில் வெறுமை சூழ்ந்து கிடக்கின்றது.

எனக்கு இதனால் துளியளவு வருத்தமும் கிடையாது என்று சொல்வதற்கில்லை. வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும் உள்ளுக்குள் ஏராளம் வருத்தம்.

வந்தார்கள்... இப்போது மீளவும் போகிறார்கள். இடையில் வந்த உறவாகி என்னுடனேயே தங்கியிருக்க வேண்டுமென எண்ணுவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்.

வந்தோரை வாழ வைக்கும் வன்னிவள நாடல்லவா இது. அந்த மண் வாசனை எனக்குள்ளும் இருக்கத்தானே செய்யும்.

ஒரு இராத்திரியில் என்னிடம் ஓடி வந்தார்கள். ஊர் பிரிந்தோடுதலென்பது எவ்வளவு பெரிய சோகமென்பது எனக்கும் தெரியும். எதுவித முணுமுணுப்புமின்றி இதற்காகவே பிறந்தவனாக அடைகலம் கொடுத்தேன்.

சும்மா சொல்லக் கூடாது, தேவகடாட்சம் நல்ல மனிதர். என்னைத் தன் பிள்ளை போலல்லவா பாவித்தார்!

அந்த மனிதரைப் பிரிந்தது கவலைதான். ஏழாண்டுகளிற்கு மேலாக என்னுடன் பழகிய உறவுகள் பிரிந்துபோவது கவலை அளிப்பதில் வியப்பொன்றுமில்லையே!

எவ்வளவு இனிமையான காலமது! வாழ்வில் வசந்த காலமென ஒன்றிருக்குமேயானால், அது அந்தக் காலமாகத்தானிருக்க முடியும். ஒன்றெனக் கூடிக் குலாவி, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக வாழ்ந்த அந்தக் காலம் மறக்கமுடியாத காலம்.

அந்தக் காலம் கனவு போலவே கலைந்துவிட, இது முரணான காலம். கிட்டத்தட்ட மயானமொன்றின் நிலையில் இவ்விடமிருக்கின்றது. தேவகடாட்சங்கள் போனமையினால் இந்தநிலை.

என் மனசை உறுத்திக் கொண்டிருக்கும் விடயமொன்றுண்டு. அதாவது, தேவகடாட்சம் குடும்பம் உதவி தேடி என்னிடம் ஓடிவந்தபோது, நிறைவான- அவர்கள் முன்னர் வாழ்ந்தது போன்ற- வாழ்க்கையை என்னால் ஏற்படுத்த முடியவில்லை.

இயன்றவரை, என் சக்திக்குட்பட்ட விதத்தில் அவர்களிற்கு உதவிகள் செய்தது உண்மைதான். அவர்களே இதைப் பலமுறை பாராட்டியிருக்கிறார்கள். இருப்பினும் முழுமையான



உதவி புரியவில்லையே என்ற கவலை எனக்குள்ளிருந்தது.

அவர்கள் யாழ்ப்பாணத்தில் வசதியாக இருந்த குடும்பமென்பதை அவர்களின் பேச்சிலிருந்தே புரிந்துகொண்டேன். தேவகடாட்சம் மனைவி மூச்சுக்கு முந்நூறு தரம் சொல்லிக் கொள்வாள். "ச்சா.. அங்க எப்பிடியிருந்தம்... எந்தப் பெரிய வீடு.. இப்ப என்ன பாடோ..."

திருமதி தேவகடாட்சத்தின் பிரலாபத்திலிருந்து, அவர்களது குடும்பம் பற்றி அறிந்து கொண்ட மேலதிக தகவலொன்றுண்டு. அவர்களது வீடு நாற்சார் வீடாம்.

பாவம் அந்தக் குடும்பம். இங்கே அதிகம் சிரமப்பட்டு விட்டார்கள். அதிலும் தேவகடாட்சம்தான் அதிகம் பாவம். இங்கே வந்ததும் மனிதரை உடும்புப் பிடியாகப் பிடித்தது மலேரியாதான். இடையிடையே வந்து மனிதரை உலுப்பி விட்டது.

'தொள தொள' தொப்பையுடன் பருத்த சரீரக்காரரான அம்மனிதர் பட்ட சிரமங்கள் சொல்லி மாளாதவை. உடல் வற்றி, ஒடுங்கிய அவரது தோற்றத்தைக் காண எனக்குள் துயர நதி பெருக்கெடுத்தோடும்.

உழைப்புக்கு அவர்கள் பட்ட பாடு... இன்றும் அந்த சோகங்களை மனதிற்குள் சேமித்து வைத்திருக்கின்றேன்.

இங்கே கடையொன்றில் கணக்கெழுதும் வேலை பார்க்கிறார் என்பது அவரது பேச்சிலிருந்து புலப்பட்டது. காலையில் நேரத்துடனேயே புறப்பட்டாரென்றால் இரவாகிய பின்தான் வீடு திரும்புவார்.

திருமதி தேவகடாட்சம் திறமையான குடும்பப் பெண்தான். கூழோ.. கஞ்சியோ பிள்ளைகளிற்குக் கொடுத்து விடுவாள்

அந்தக் குடும்பத்தில் எனக்குப் பிடித்த அம்சம் எவவளவு சோதனைகளிலும் சிரிப்பைத் தொலைக்காத குடும்பமது.

அதிலும், அவர்களது கடைக்குட்டிப் பயலிருக்கிறானே, அவனென்றால்த்தான் எனக்கு உயிர். திரண்ட உடம்புடனிருந்த அவனைப் பார்த்து அடிக்கடி கடாட்சம் புளகாங்கிதம் கொள்வார். "அவன் என்ன மாதிரித் தான்... நான் சின்னனில உப்பிடித்தான்..."

அந்தப் பயல் சரியான சுட்டி. விடிவதற்கு முன்னரே எழுந்து விடுவான். பிறகென்ன என்னுடன் தான் அவனது விளையாட்டு. என்னைச் சுற்றிச் சுற்றி ஓடி வருவான். நானும் விளையாட்டுக் காட்டுவேன். தன் பிஞ்சுக் கரத்தினால் என்னை அடிப்பான். சில சமயங்களில் சிறு காயங்களையும் உணடாக்கியிருக்கிறான்.

அவை எனக்கு வலிப்பதில்லை. அவனது குறும்பை இரசிப்பதாலோ என்னவோ தெரியவில்லை. அவனடிக்கும் அடிகள் பூங்கொத்தால் வருடுவது போல்படும். தவிரவும் எனக்குத்தான் அதிக பொறுமை வாய்த்திருக்கின்றதே!

பாவம் அந்தப் பயல். அற்ப ஆயுள்க்காரன்! நான்கு வருடத்திற்கு முன் - தனது பத்தாவது வயதில்- செத்துப்போனான். மலேரியா அவனுயிரைக் காவு கொண்டு விட்டது.

அந்த அற்ப ஆயுள்க்காரன் என் மடியில்க் கிடந்து துடித்ததைக் காணப்பொறுக்க முடியாமல்தானிருந்தது. ஆயினும் என்ன செய்வது?

வைத்தியசாலைக்குக் கொண்டு போயும் பலனில்லை. வைத்தியர்களிற்குச் சோதிடர்களின் நிலை. சோதிடம் பார்ப்பவர்களைப்போல, சோதித்து வருத்தத்தை மட்டுமே சொல்லக்கூடியநிலை. அங்கு தான் மருந்துகளே இல்லையே! அப்போதுதானே பாதைத் தடை.

என் மடியில்க் கிடந்து அணு அணுவாகச் செத்துப்போனான்.

என்னிடம் அடைக்கலம் தேடியவர்களிற்கு முழுமையான பாதுகாப்புக் கொடுக்க முடியாமல் போன வேதனை என்னுள். பெரும் புயலை எதிர்த்து கிடுகு வேலி அமைக்க முடியுமோ? இந்த யதார்த்தம் புரிந்தாலும் என்னுள்ப் பொங்கிய வேதனை ஏராளம்.

மகனது இறப்பு திருமதி தேவகடாட்சத்தை அதிகம் பாதித்து விட்டது. மகன் இறந்த சில நாட்களிற்குள்ளாகவே எலும்பும் தோலுமாகி விட்டாள்.

இதன் பின் தேவகடாட்சம் குடும்பத்திற்கும் எனக்குமான உறவில் சிறு விரிசல் ஏற்படுமெனவும், என்னுடனிருப்பது வசதிக் குறைவு எனவும் சொல்வார்களெனவும் எண்ணியிருந்தேன்.

ஆயினும் அப்படியெதும் நிகழவில்லை.

தேவகடாட்சம் தம்பதி தனியே பெற்றோர் நிலையிலிருந்து சிந்திக்கவில்லை. அப்படிச் சிந்தித்திருந்தால் என்னை அவர்கள் வெறுத்தொதுக்கியிருக்கக்கூடும். (அப்படிச் சிந்திப்பவர்களாயிருப்பின் எனக்கும் அவர்களிற்குமான உறவு ஏற்பட்டிருக்காது என்பதனையும் கவனத்திற் கொள்க.)

அந்தக் குடும்பத்திலொருவன் இறக்கும்வரையில் பார்த்துக் கொண்டிருந்தேனே என்ற வேதனை என் மனதை அரித்துக் கொண்டிருந்த நாட்களில்த்தான் அது நடந்தது. அவர்களின் பேச்சில் புதிய சொற்கள் இடம்பெறத் தொடங்கியிருந்தன.

இதுவரை நான் கேட்டறிந்திராத... அர்த்தம் தெரியாத சொற்கள் அவை. போகப் போகத்தான் தெரிந்தது அச்சொற்களின் அர்த்தம். அவர்கள் பாவித்த சொற்கள்- சமாதானம், பேச்சுவார்த்தை என்பன.

அவர்களின் பேச்சிலிருந்து நான் புரிந்து கொண்ட அடுத்த விடயம்- அவர்கள் மீண்டும் தம் சொந்த ஊர் திரும்பப் போகிறார்கள்.

இதைக் கேட்ட உடனேயே, என் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது.

ஏழு வருடங்களாக இன்பம்... துன்பம்... மரணம் எல்லாவற்றிலும் இணைந்திருந்துவிட்டுப் பிரிவதென பது இலேசான காரியமா? என் வாழ்விலேற்படும் பெரிய பிரிவிது.

அவர்களின் பேச்சு வலுப்பட்டு... பயணத்திற்கான ஆயத்தங்கள் நடக்கையிலும் மௌனமாகவே பார்த்துக் கொண்டிருந்தேன். என் இதயம் வடித்த இரத்தக் கண்ணீரை எவரும் கவனிக்கவில்லை!

இறுதியில் அவர்கள் போய் விட்டார்கள்.

ஏழு வருடமாக இருந்த உறவு அறுந்துவிட்டது. நான் மௌனமாக அழுது கொண்டிருக்கிறேன்.

பிரிவுகள் இயற்கையானவைதான். ஆயினும், அவற்றிலும் சிறு சந்தோசமொன்றிருக்க வேண்டுமே- இதுதான் என் கவலை.

சொந்த ஊர் போகிறார்கள். இது அவர்களது உரிமை. என்னிடம் ஒரு வார்த்தை கூறினால் என்னவாம்?

ஓடி வந்தபோது அடைக்கலம் கொடுத்து... ஆறுதலாயிருந்தவனை, அவர்கள் கவனிக்காததுதான் கவலை. மகன் இறந்து போனபோதுகூட, என்னுடன் கோபித்தறியாத தேவகடாட்சம் தம்பதிக்கு என்ன நடந்தது?

யாழ்ப்பாணம் போவதற்கான அலுவல்களை ஓடி ஓடிப் பார்த்ததனால் தேவகடாட்சத்திற்கு முன்னரே சொல்ல நேரமில்லாமல்ப் போய்விட்டதென வைத்தாலும், போகும் போதாவது ஒரு வார்த்தை சொல்ல முடியாமற் போய்விட்டதா?

இங்கேயிருந்த காலத்தில் அவருக்கு ஆறுதலாக இருந்தவனல்லவா நான். எவ்வளவு துன்பத்துடன் வந்தபோதும், என் மடியிற் சாய்ந்தாரென்றால், கவலைகளை மறக்கவல்ல, சுகத்தையல்லவா கொடுத்தேன்.

இவற்றையெல்லாம் எண்ணினால், வருத்தம்தான் எஞ்சும். அவற்றை மீறிய சந்தோசம்... பெருமைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

என்னை ஒரு சகாப்தத்தின் குறியீடாகவல்லவா பேசிக் கொள்கிறார்கள். அடங்கியிருக்க மறுத்து, அடங்காப் பற்றுக்கு வந்தவர்களை ஆதரித்தமையினால், நானும் பேறுபெற்றவனாம்.

சுதந்திரப் போரில் நானும் சிறு பங்கெடுத்தேன் என எண்ணும்போது என்னுள் உவகை பொங்குகின்றது. என்னை நாடியவர்களிற்கு, என்னால் முடிந்த உதவி செய்திருக்கிறேன். நவீன மாடி வீடுகளைப் போல குளிரோ... நுளம்போ நுழைய முடியாதவாறு கட்டப்படாதிருப்பினும், என் பணியின் பரிமாணம் புரிகிறது.

தேவகடாட்சம் சொல்லாமல் போனதற்கான காரணமாக - எனக்கு உயிரில்லை என்பதைக் கொள்ளலாம் போலிருக்கின்றது.

என்னுள்ளிருக்கும் உயிர் குறித்து யாரும் அறியாமல் விட்டதற்கு நான் பொறுப்பாளியாக முடியாது. மாறாக, வருந்தமட்டுமே முடியும்.

ஒருவன் நிமிர்ந்து நிற்க முடியாத...சில கிடுகுகளால் வேயப்பட்டு வானம் பார்க்கும் ஒரு சிறு மண் குடிசையென என்னை யாரும் அற்பமாக எண்ணிவிடாதீர்கள். நானொரு காலத்தின் பதிவு.

இப்போது இங்கே தனிமையிலிருக்கின்றேனே தவிர, இது என்றும் நிரந்தரமாகிவிடாது என்றுதான் எண்ணுகின்றேன். மீண்டும் தேவகடாட்சம் குடும்பமோ... வேறொரு குடும்பமோ என்னை நாடி வந்தால் உதவி செய்யத் தயாராகத்தானிருக்கின்றேன்.

# மாலையும் சோலையும்

## கலாநிதி. சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பன்னிரண்டு வயதுவரை எல்லோருக்கும் கட்டாயக் கல்வி என்ற விதி இருந்தும், அதனைக் கண்காணிக்க அலுவலர் (Attendance Officer ) நியமிக்கப்பட்டிருந்தும், இடைநிற்போர் தொகையைக் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. காரணம், அன்று பெரும்பாலோர் வறுமைக்கோட்டின் கீழ் இருந்தமையே என்று கருதுகிறேன்.


'அடியாத மாடு படியாது' (இது மாட்டுக்குச் சொல்லப்பட்டதாயினும், மாணவ சமூகத்திற்கே பொருத்தமான பழமொழியாக அன்று நிலவியது.) 'கல்வி என்ற பயிருக்குக் கண்ணீர் என்ற மழை வேண்டும்' என்னும் பழமொழியும், புதுமொழியும் தாரக மந்திரங்களாய் அன்று விளங்கின.

எண், எழுத்து, வாசிப்பு என்பவற்றிலே தொடங்கி இலக்கியம், ஆங்கிலம், (4ஆம் வகுப்பில் தொடங்கும்.) சரித்திரம், பூமிசாஸ்த்திரம், சுகாதாரம், நாட்டுச் சீவன சாஸ்த்திரம் என்று படிப்படியாகத் தொகையிற் கூடிசசெல்லும் பாடங்களை ஆறாம் வகுப்புவரை கற்றோம்.

கற்றல் உபகரணமாக அரிவரியில் இருகால்களோடு கூடிய நீண்ட பலகையில் குழிகளிட்டு, அவற்றில் கதவுக்குமிழிகள் போன்ற மரத்துண்டுகளைச் செருகி, எண்பாடம் கற்பிக்கப்பட்டது. கதைப் படங்களோ, வேறு உபகரணங்களோ பயன்படுத்தப்படவில்லை. சந்தத்துக்கும் எளிய தாளத்துக்கும் பொருத்தமான பாட்டுக்கள் கூட்டிசையாகக் கற்பிக்கப்பட்டன. 'தந்தந்தந்தந் தனதந்தினா, தந்திரக்குரங்கின் மோசம் பகர்', 'குண்டுடுக்கிக் குடுகுடுக்கிக் கூடை கையில் ஏந்திக் குனிந்து நின்று பழம்பொறுக்கும் குறத்தியடி அம்மே', 'மழைக்காலம் மிகப் பதனம்', 'அம்மா மெத்தப் பசிக் கிறது' முதலிய பாடல்களை ஆரம்ப வகுப்புகளிலே கூட்டாகக் கத்திப் பாடிய நினைவு இன்றும் பசுமையாக உள்ளது.

ஆறாம் வகுப்பில் பூகோளம், உலகப்படம் என்பன உபகரணங்களாயின.

பாடசாலை ஆசிரியர்களான அமரர்கள் க.சிவகுரு, க.முத்துக்குமாரு (பின்னர் அதிபர்) ஆகியோர், சைவ உணவுக்காரர்கள்- மத்தியானச் சாப்பாட்டை அவர்கள் சைவர்களாகிய எங்கள் வீட்டில் வைத்துக்கொண்டார்கள். இதனால் எனக்கு ஏற்பட்ட நன்மையிலும் தீமையே அதிகம். 'இவன்ரை கண்ணை விட்டு உடம்பிலை எந்தப் பாகத்தையும் பதம் பார்க்கலாம்'. என்று சிற்றப்பர், மாமா ஆகியோரின் வேண்டுதல், வார்த்தைக்கு வார்த்தை ஆசிரியர்களால் நிறைவேற்றப்பட்டது.



*(அடுத்தவாரம் தொடரும்)*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

உடையார் எனப்படுவது ஊக்கம்அஃது இல்லார்
உடையது உடையரோ மற்று.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## ஊர் கூடித் தேரிழுப்போம்!

நோய்வாய்ப்பட்டு, தளர்வுற்றுக் கிடந்த விளையாட்டுத்துறையை தூக்கி நிறுத்தி - மீண்டும் புத்தூட்டம் அளிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ள செய்தி - உள்ளூர் விளையாட்டு ஆர்வலர்களினதும், வீர, வீராங்கனைகளதும் காதுகளில் தேன்பாய்ச்சும் செய்தியாக ஒலிக்கிறது.

இந்தவகையில் - யுத்த மேகங்கள் சூழ்ந்து திரண்டிருந்த வட - கிழக்குப் பகுதியில், மாபெரும் விளையாட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் மிகப் பிரமாண்டமான முறையில் தயாராகி வருகின்றன.

தமிழீழ விளையாட்டுத் துறையினர் நடாத்தும் தமிழீழ தேசிய பெரு விளையாட்டுப் போட்டி - 2003, இம்முறை இரண்டாவது தடவையாக கிளிநொச்சியில் பெரு விமரிசையாக நடைபெறவுள்ளது.

வட - கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருந்து, இம்முறை போட்டியாளர்கள் கிளிநொச்சியில் கூடவிருப்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

இவ்வாறான விளையாட்டு விழாக்கள் நலிந்து கிடக்கும உள்ளூர் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் என்பதோடு, இலைமறை காயாக மறைந்திருக்கும் திறமையாளர்களை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தும் அற்புத வாய்ப்பாகவும் அமையவுள்ளது.

வட - கிழக்கைப் பொறுத்தவரையில் போர் காரணமாக - விளையாட்டுத்துறை பெருமளவில் விருத்தியடையவில்லை என்பதோடு, விளையாட்டுத் துறையை வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகளும், ஊக்குவிப்பும் கிடைப்பது மிகக் குறைவாகவே இருந்தன.

இந்த நிலையில் - தற்போது உருவாகின்ற சமாதானச் சூழலைச் சரிவரப் பயன்படுத்தி, உள்ளூர் விளையாட்டு வீரர்களை - செம்மைப்படுத்தி, திறன் வளர்த்து முன்னேற்றும் பாரிய பணி காத்திருக்கின்றது.

இந்த அவசிய நடவடிக்கையில், தமிழீழ விளையாட்டுத்துறை கவனம்கொண்டு, அதன் தொடக்கமாக இவ்வாறான விளையாட்டு விழாக்களை நடாத்த முன்வந்திருப்பது - காலத்தின் தேவை கருதிய, பாராட்டுக்குரிய விடயமாகும்.

தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் - விளையாட்டுத் துறைக்கென தனியான அமைச்சர் முதல் ஒவ்வொரு விளையாட்டுக்குமென தனித்தனிச் சபைகள், அமைப்புக்கள் அமைக்கப்பட்டு - சகல வசதிகளும், வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ள நிலையில் -

தமிழர் பகுதிகள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் வெளிப்படையாகவே புறக்கணிக்கப்பட்டு வந்தன.

இவ்வாறான சூழலில் - எம்மை நாமே வளர்த்துக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கவேண்டிய அழுத்தமான சூழலில் - விளையாட்டுப் பெருவிழா போன்ற முயற்சிகள் - 'நாமும் வெல்வோம்' என்ற உறுதியையும் ஊக்கத்தையும் எமது விளையாட்டு வீரர்களிடையே வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இம்முறை உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், வலைப்பந்து, கரப்பந்து ஆகிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று - வரும் காலத்தில் மைதான விளையாட்டுக்கள், மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், உள்ளக விளையாட்டுக்கள் எனப் பல்வேறு துறைகளிலும் - தமிழீழ விளையாட்டுத்துறையினர் ஊக்கம் தரவேண்டுமென அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

இது தமிழீழ விளையாட்டுத்துறையினருக்கு மட்டுமே தனித்துச் சாதிக்கக்கூடிய விடய்மல்ல. எமது பிரதேசங்களிலுள்ள பொருளாதார வலுவுள்ளோர், வர்த்தகர்கள், அமைப்புக்கள் என அனைவரும் இணைந்து, வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் செய்யும்போது - இவையெல்லாம் அதிவீச்சுடன் சாத்தியமாகும்.

ஆரோக்கியமும், விடாமுயற்சியும், திறனும் கொண்ட இளம் விளையாட்டு வீரர்களை எமது மண்ணிலிருந்து உருவாக்க அனைவரும் ஒன்றுதிரண்டு செயற்பட்டாலேயே, எமது மண்ணிலிருந்தும் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் தோன்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். எனவே, தமிழீழ விளையாட்டுத்துறையினரின் தொடர்முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவளிப்போம்.

உலக அரங்குகளில் நாளை எமது வீரர்களும் வெற்றிக் கொடிநாட்ட - இன்றே எம் பங்களிப்பைப் பற்றிச் சிந்திப்போம்! செயற்படுவோம்!

# பாரிஸில் தமிழ்ச் சிறுமியை வல்லுறவுக்குட்படுத்தி

# கொலைசெய்த இருவருக்கும் கடூழியச்சிறை

## 12 நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்று தீர்ப்பு

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் 11 வயதான தமிழ்ச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி, கொலைசெய்த குற்றத்துக்காக குற்றவாளிகள் இருவருக்கு கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஈழத்திலிருந்து இடம்பெயர்ந்து பாரிஸின் புறநகர்ப் பகுதியான குசன்வீல் எனும் நகரத்தில் வசித்துவந்த ஸ்ரீதரன் - கமலா தம்பதியினரின் மூத்த மகளான நிதர்சினி என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இக்கொலைச் சம்பவத்தோடு தொடர்புடைய முதலாவது எதிரியான தேவராசா பேட்சன் என்பவருக்கு 22 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், இரண்டாவது எதிரியான தியாகராஜன் தியாகரூபன் என்பவருக்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

12 நீதிபதிகளைக் கொண்ட நீதிச் சபையின் தலைமை நீதிபதி, கடந்த திங்களன்று இத்தீர்ப்பை வழங்கினார்.

இக்கொலைச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மேற்படி கொலை செய்யப்பட்ட சிறுமியின் வீட்டிற்கு பெயின்ரிங் வேலைக்கு பேட்சன் என்பவரும் அவரது நண்பர் தியாகரூபனும் 1999.02.12 ஆம் திகதியன்று சென்றிருந்தனர்.

சிறுமியின் பெற்றோர்கள் இருவரும் அதிகாலையே வேலைக்குச் சென்றிருந்தபடியால், மதிய உணவுக்காக பாடசாலையில் இருந்துவந்த சிறுமி, தனியாக வீட்டில் இருந்தாள். இதனைப் பயன்படுத்தி பெயின்ரிங் வேலையின்போது, தாங்கள் விட்டுச்சென்ற பிரஷ் மற்றும் உபகரணங்களை எடுத்துச்செல்லப் போவதாக கூறி வீட்டினுள்ளே நுழைந்தார்கள்.

சிறுமியைக் கடத்திக்கொண்டு சென்று பணம் பறிக்கும் நோக்குடன் சென்ற இவர்கள், சிறுமியின் பலத்த எதிர்ப்பினால் கடத்திச் செல்லும் நோக்கம் நிறைவேறாது போகவே, வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்ததாக விசாரணைகளின்போது தெரியவந்தது.

பன்னிரண்டு நீதிபதிகளைக் கொண்ட நீதிபதிகள் குழு, மேற்படி தீர்ப்பை வழங்கிவிட்டு, மகளைப் பறிகொடுத்த நிலையில் கண்ணீருடன் நின்ற ஸ்ரீதரன் - கமலா தம்பதியினருக்கு சோகம் கலந்த உணர்வுடன் தமது அனுதாபங்களைத் தெரிவித்தனர்.

## சட்டம் படிப்பதற்கு கபடிப் போட்டி எவ்வாறு உதவியாக அமையும்?

### மானியங்கள் ஆணைக்குழுவிடம் உயர்நீதிமன்றம் கேள்வி

ஒரே மாவட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றி, 'இசற்' ஸ்கோரில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவனுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படாமல், 'இசற்' ஸ்கோரில் குறைந்த புள்ளியைப்பெற்ற மாணவனுக்கு கபடி போட்டியில் பங்குபற்றியதால் அனுமதி வழங்கப்பட்டது, அடிப்படை மனித உரிமை மீறல் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

ஒரே மாவட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு மாணவர்களில், கபடிப் போட்டியில் பங்குபற்றிய மாணவனுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருப்பது முறையானதல்ல.

சட்டம் படிக்க கபடி எந்த வகையில் உதவியாக அமையும் என உயர் நீதிமன்ற நீதியரசர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயத்தில் மாணவனின் அடிப்படை உரிமை மீறப பட்டிருக்கிறது எனத் தீர்ப்பளித்த நீதிமன்றம், குறித்த மாணவனுக்கு 15 ஆயிரம் ரூபா வழக்குச் செலவாக அளிக்கும் படியும் மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பணித்துள்ளது.

## மூளைவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிகிச்சை

### இன்றும், நாளையும் நடைபெறும்

மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான விசேட பயிற்சித் திட்டக் கருத்தரங்கு, இன்று யாழ. பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் கருத்தரங்கைத் தொடர்ந்து, மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான கல்வியில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற கல்விமான்களாலும் பயிற்றப்பட்ட உள்ளூர் நிபுணர்களாலும் நவீன பயிற்சிகள் பற்றி விளக்கமளிக்கப்படும்.

தொடர்ந்து நாளை பி.ப 3 மணி வரை மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகள், நிபுணர்களால் தனித் தனியாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உகந்த பயிற்சிகளும் வழங்கப்படும்.

# வளைகுடா நெருக்கடியால் பாதிப்புகள் சந்திரிகா - ரணில் ஆராய வேண்டும்

## என்கிறார் அமைச்சர் பந்துல விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஈராக்கில் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வளைகுடாவில் யுத்தம் மூண்டால் இலங்கைக்கு பொருளாதார ரீதியாக பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

இதுபற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தி வருவதாகவும், அவர் பொருளாதார அபிவிருத்திக்குழுவுக்கு யுத்தத்தால் ஏற்படும் பின்னடைவுகளுக்கு பரிகாரம் காணுமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மேலதிக எண்ணெய் வகைகளை சேமித்து வைப்பதற்கும், யுத்தத்தால் ஏற்படும் வாழ்க்கைச் செலவுகளை உயராமல் எவ்வாறு கையாளலாம் என்பது பற்றியும் அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத்த நிலையில் உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

### திருமலை - கோபாலபுரத்தில்

## கடற்படையினரின் புதிய முகாம் கண்காணிப்புக்குழுவிடம் மகஜர்

திருகோணமலை மாவட்டத்தின் கோபாலபுரம் பகுதியில் கடற்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் வாழும் பொதுமக்கள் முகாமை அகற்றுமாறு கோரி பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்று மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட இடத்தில் கடந்த காலங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட போராளிகளின் நினைவுத்தூபி ஒன்றும் நிறுவப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இப்பிரச்சினை தொடர்பாக விரைவில் கடற்படையுடன் தொடர்புகொணடு உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிபபுக் குழு திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் தெரிவித்தார்.

## பத்து வீட்டுத் திட்டப் பகுதியில் முகாம் அமைக்கும் ராணுவம்!

### தனியார் காணிகளும் கபளீகரம்

வரணிப் பகுதியிலுள்ள பத்து வீட்டுத் திட்டம் என்னும் இடத்தில், வரணி வைத்தியசாலைக்கு முன்னால் இராணுவத்தினர் புதிதாக முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தனியாருக்குச் சொந்தமான காணிகள் பலவற்றை ஒன்றிணைத்து அவற்றைத் தமது வாகன உதவியுடன் உழுதும், காணிகளைச் சுற்றி மண் அணைகள் அமைத்தும் வருகின்றனர். இம்முகாம் அமைக்கும் பிரதேசத்தில் படையினரது விளையாட்டு மைதானமும் அடங்கியுள்ளது.

மேற்படி பத்து வீட்டுத் திட்டத்திட்டப் பகுதி, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. கடந்தகால யுத்தத்தின்போது இவ்வீடுகள் சேதமாக்கப்பட்டிருந்தன. (34)

## கிண்ணியாவில் அமைகின்றது இலங்கையின் நீளமான பாலம்

இலங்கையின் மிக நீளமான பாலத்தை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா - வெள்ளை மணல் ஆகியவற்றை இணைந்தே 400 மீற்றர் நீளமான இந்தப் பாலம் அமைக்கப்படவுள்ளது. இப்பாலம் 10 மீற்றர் அகலமுடையதாக இருக்கும்.

இப்பாலத்தை அமைக்க 500 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கென சவூதி அரேபிய அபிவிருத்தி வங்கி உதவிகளை வழங்கவுள்ளது.

அமைச்சர் ஹக்கீமின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடைபெறவுள்ள இந்த வேலைத் திட்டத்திற்கு கிழக்கு அபிவிருத்தி அமைச்சும், பெருந்தெருக்கள் அதிகாரசபையும் பொறுப்பாக இருக்கும்.

## சிறையில் சிறுவன் மீது தாக்குதல் சிறைக்காவலர்கள் விசாரணையில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் சிறுவன் ஒருவன் தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணை கடந்த மாதம் 29 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

குடும்பத் தகராறு காரணமாக சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட க.கருணாநிதி (வயது 10) என்ற சிறுவனே கடந்த மாதம் 23 ஆம் திகதி சிறையில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்த முறையீட்டினை அடுத்து, சிறுவனைத் தாக்கிய சிறைக் காவலர்களை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி விசாரணை செய்தார்.

# போருக்கு அழைப்புவிடும் ஊடகங்கள்




கொழும்பில் கடந்தவாரம் வெளியான ஆங்கில வாரப்பத்திரிகைகள் சிலவற்றைப் படித்தவர்களுக்கு, அவர்கள் மனதில் சமாதானம் தொடர்பாக இருந்திருக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச நம்பிக்கைகளும் ஆட்டங்காணத் தொடங்கியிருக்கும். தலைப்புச் செய்திகள் முதல் உள்ளே வெளியான சில செய்திகள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் வரையிலும் இந்தத் தொனி காணப்படவே செய்தது. ஒருபுறம் இவை இப்போதிருக்கும் யதார்த்த நிலையைச் சுட்டும் அதேவேளை, சில செய்திகள் வேண்டுமென்றே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பனவாக அமைந்திருப்பதையும் காணமுடிந்தது. சாராம்சத்தில் சில அரசியல்வாதிகளும், ஊடகங்கங்கள் சிலவும் சமாதானத்தை எப்படியும் சீர்குலைத்துவிடுவது எனக் கங்கணம் கட்டிநிற்கின்றனர் என்பதே புலனாகின்றது.

ஒருவருட காலத்துக்கும் மேற்பட்ட போர்நிறுத்தத்தையும் நான்கு கட்டப் பேச்சுக்களையும் கடந்துள்ள நிலையில், இந்தச் சமாதான முயற்சிகளால் தற்போது தமிழ்மக்களுக்குக் கிடைக்கவுள்ள ஒரேயொரு நன்மையான புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கான நிதியுதவியே தற்போது இவர்களுக்குச் சகித்துக் கொள்ளமுடியாத ஒன்றாக இருக்கின்றது. இந்த நிதியுதவிக்கும் இனவாத முலாம்பூசி சிங்கள மக்களை அதற்கெதிராகக் கிளர்ந்தெழச் செய்து, அதை அடிப்படையாக வைத்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சிகள் தற்போது ஆரம்பித்திருக்கின்றன.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பான் நாட்டு விசேட தூதுவர் யசுஷி அகாஷி வன்னிப்பகுதிக்கு விஜயம் செய்து விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடிய பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு வேண்டிய நிதியுதவிகளை வழங்க ஜப்பான் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தார். இவரது விஜயமும், இவர் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை நேரில் சென்று சந்தித்தமையுமே வயிற்றெரிச்சலைக் கிளப்பியிருக்கக்கூடிய நிலையில், இவர் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் வெளியிட்ட சில கருத்துக்கள் சிங்கள இனவாதிகளின் கடுப்பை மேலும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

அப்படி என்னதான் அவர் சொல்லிவிட்டார்?

மார்ச் மாதம் ஜப்பானில் நடைபெற ஏற்பாடாகியுள்ள நிதியுதவி தொடர்பான மாநாட்டில் சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஒரேயளவு மரியாதையே வழங்கப்படும் என்று அவர் தெரிவித்திருந்தார். அதாவது சிறிலங்கா அரசுக்குச் சமதையாகச் சம அங்கீகாரம் இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும் என்பதே அவரது கருத்தின் உட்பொருள்.

இவ்வளவு காலமும் வெறும் பேச்சளவிலும், உறுதிமொழிகளுடனுமே கழிந்த சில விடயங்கள், தற்போது படிப்படியாக நடை முறைக்கு வந்துள்ளமையே சிங்களக் கடும் போக்காளர்களால் சகித்துக்கொள்ள முடியாத விடயமாகியிருக்கின்றது. இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சமவுரிமை வழங்குவது மட்டுமல்ல, இவ்வளவு காலப்போரினால் சிங்களப்படைகளால் சின்னாபின்னப்படுத்துப்பட்ட வடக்கு-கிழக்குப் புனரமைக்கப்படுவதைக்கூட இவர்களால் சகித்துக் கொள்ளமுடியவில்லை.

ஜப்பான் நாட்டின் நிதியுதவி தொடர்பில் தனது பத்திரிகையில் தலைப்பூச்செய்தியொன்றையே வெளியிட்டிருந்த சிங்களவர்களால் நடாத்தப்படுகின்ற ஆங்கிலப்பத்திரிகையொன்று, விடுதலைப்புலிகள் ஜப்பானிடமிருந்து 35 மில்லியன் ரூபா நிதியுதவி பெறப்போவதாகத் தெரிவித்திருந்தது. வடக்கு-கிழக்கு புனர்வாழ்வுக்கு என அரச பிரதிநிதிகளையும் உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள உபகுழுவிடம் கையளிக்கப்படவுள்ள இந்த நிதி மக்களுடைய புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்காகவே பயன்படுத்தப்படவுள்ளது. இந்த நிதியுதவியைப் புலிகளுக்குக் கிடைக்கவுள்ள நிதியாக இந்தப் பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்ததன் உள்நோக்கம் என்னவென்பது புரியாதவொன்றல்ல.

ஈற்றில் இந்தச் செய்தியை ஜப்பான் அரசு மறுத்து விளக்கமளிக்கும் அளவுக்கு நிலைமை முன்னேறியிருக்கின்றது. இந்த நிதியுதவி சிறிலங்கா அரசின் பிரதிநிதிகளைக் கொண்ட கிளிநொச்சிச் செயலகத்தின் வசதிகளை அதிகரிப்பதற்கென்றே வழங்கப்படுகின்றது என ஜப்பான் அரசு ஒரு நீண்ட விளக்கத்தை வெளியிடவேண்டியிருந்தது.


சமாதான முயற்சிகளின் பயனாக புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள், தனித்தமிழீழத்தைத் ஸ்தாபிக்கப் போகிறார்கள் என்று பரப்பப்பட்டுவரும் விஷமப் பிரசாரத்துக்குத் தீனி போடுவதுதான் இந்தச் செய்தியின் நோக்கமோ என்ற சந்தேகமே வலுப்படுகிறது. இதனை நிரூபிக்கும் விதமாகவே இந்தப் பத்திரிகைக் குடும்பத்தின் செயற்பாடு தொடர்ந்தும் அமைந்திருந்தது.

புலிகளுக்கு நிதியுதவி கிடைக்கவுள்ளதாகத் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்த இந்தப்பத்திரிகையின் குடும்பத்தைச் சேர்ந்த தினசரியில், ஜப்பான் அரசின் விளக்கம் மூன்றாம் பக்கத் தலைப்புச் செய்தியாகவே வெளியிடப்பட்டிருந்தது. இவ்வாறுதான் சமாதானங்குறித்த கொழும்பு ஊடகங்களின் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன.

இது இந்தளவோடு நின்று விடவில்லை. இதே ஆங்கில வாரப் பத்திரிகையின் குறிப்பிட்ட வெளியீட்டின் முதற் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த படமொன்று சிங்களக் கடும் போக்காளர்களைத் தூண்டும் விதமானதாகவே அமைந்திருந்தது. இந்தப் படத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ கடற்படைப் படகொன்றில் பொருத்தப்பட்ட அதிசக்தி வாய்ந்த இயந்திரத் துப்பாக்கியொன்றைக் கைப்பிடித்தவாறாகக் காணப்படுகிறார். இவருக்கு அருகே யாழ். உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் புலிகளுடன் முரண்பட்ட தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா காணப்படுகிறார். இந்தப் படம் சொல்ல முற்படும் செய்திதான் என்ன?

சமாதானம் குறித்த நம்பிக்கைகள் வலுப்பட்டு போர் நிரந்தரமாகவே முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு சூழலில் பத்திரிகையின் முதற் பக்கத்தில் இத்தகைய படமொன்றை வெளியிட வேண்டிய அவசரம்தான் என்ன?

படத்தில் ராஜபக்ஷ பொட்டு வைத்தபடி காணப்படுவதையும் சுட்டிக் காட்டியுள்ளது பத்திரிகை. ஏனெனின் தைப் பொங்கல்விழாவுக்காக இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனால் அழைத்துச் செல்லப்பட்ட ராஜபக்ஷ, அங்கே பொங்கல் விழாவில் தமிழ் மக்களோடு கலந்து மகிழ்ந்திருந்த படத்தை இந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்கலாமே. அதைவிடுத்து இத்தகைய படமொன்றை வெளியிட்டதன் மூலம் இந்தப் பத்திரிகை மீண்டும் போர் மூள்வதற்கான எதிர்வு கூறலைக் கூற முயல்கிறதா?



இந்தச் சந்தேகத்தை மேலும் மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே இப்பத்திரிகையில் இன்னும் பல விடயங்கள் காணப்பட்டன.

புலிகளின் கிழக்கு மாகாண விசேட தளபதி கேணல் கருணா டிசம்பர் மாதம் சுவிட்சர்லாந்தில் ஆற்றிய உரையொன்றையும் பத்திரிகையின் முன்பக்கம் தாங்கியிருந்தது. அதில் தமிழ் மக்கள் தமது படையின் பலத்தைப் பேண, தொடர்ந்தும் நிதியுதவி செய்யமுன் வரவேண்டும் என்ற கருணாவின் கோரிக்கை முக்கியத்துவப்படுத்தப்பட்டிருந்தது.

இது புலம் பெயர்ந்த நாடுகளில் வசித்து வரும் தமிழ் மக்களிடம் கருணா விடுத்த வேண்டுகோள். சமாதான நகர்வுகள் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடையும் வரையில் படைச் சமநிலை பேணப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தினதும், நடுநிலையாளர்களாகச் செயற்பட்டுவரும் நோர்வேத் தரப்பினதும் கருத்தாக இருக்கின்றது. இந்நிலையில் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கருணா ஆற்றிய இந்த உரையை முன்பக்கச் செய்தியாக இந்தப் பத்திரிகை தாங்கி வரக் காரணம் என்ன?

இத்தோடு விட்டதா இந்தப் பத்திரிகை என்றால் இல்லை. அதன் நடுப்பக்கத்தில் அதன் பிரபல இராணுவ ஆயவாளர் விடாமல் தொடர்ந்தும் புலிகளுக்குக் கொழும்பூடாகக் கொண்டு செல்லப்பட்ட வானொலிக் கருவிகள் தொடர்பான விரிவான கட்டுரையொன்றை வரைந்திருந்தார். ஆக, ஒட்டுமொத்தத்தில் இந்தப்பத்திரிகை சமாதான முயற்சிகள் தொடர்பில் சந்தேகங்களைத் தூண்டிவிட்டு, சிங்கள மக்களது மனங்களில் மீண்டும பகையுணர்வை வளர்க்கவே விரும்புகிறதா? சில ஊடகங்களுக்கு இத்தகைய ஒரு வியாதி நீண்ட காலமாகவே காணப்பட்டு வருகிறது.

இந்த வியாதிக்கான சரியான காரணம் என்ன என்பதை ஆராய முற்பட்டால் இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்களைக் கண்டுகொள்ளலாம். இரு தசாப்தகாலத்துக்கு மேலாகத் தொடர்ந்த யுத்தத்தின் விளைவாக இன்று ஊடகங்கள் பலவும் அதற்கேற்றாற்போல் இயைபாக்கம் அடைந்துவிட்டன. அதாவது, தினமும் இலங்கையின் ஏதோ ஒரு மூலையில் நடைபெற்று வந்த மோதல்கள் தொடர்பான செய்திகளையும், விபரங்களையும் வெளியிட்டுவந்த பழக்கம், இதில் ஊடகங்களை ஊறிப்போகச் செய்துள்ளன.

தினசரி போர்ச்செய்திகளை வெளியிட்டதற்கு அப்பால், வாராந்தம் கள ஆய்வு என்ற பெயரிலும், இராணுவ ஆய்வு என்ற பெயரிலும் போர்க்கள நிலைமைகளைப் பல பத்திரிகைகள் வெளியிட்டுவந்தன. எத்தனையோ இளம் உயிர்களோடு சம்பந்தப்பட்ட இந்த விவகாரத்தை இந்த ஊடகங்கள் கிரிக்கெட் விளையாட்டுப்போல் சுவாரஸ்யமாக எழுதி வாசகர்களைக் கவர்ந்து வந்தன.

ஓராண்டு காலத்துக்கும் மேலாகத் தற்போது போர் ஓய்ந்துள்ள நிலையில் இந்த ஆய்வாளர்களின்(?) நிலை கவலைக்கிடமாகியுள்ளது. அதுமட்டுமன்றி, போரை ஒரு கவர்ச்சிகரமான விடயமாக எழுதி வியாபாரத்தைப் பெருக்கி வந்த பல பத்திரிகைகளுக்கு அதைவிடுத்து வேறு விடயங்களில் வாசகர்களைக் கவரவும் தெரியவில்லை.

விளைவு, ஏதோ ஒரு விதத்தில் வாசகர்களின் உணர்வுகளுக்குத் தீனிபோடும் வகையில் செய்திகளையும், ஆய்வுகளையும் வெளியிட்டு வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளும் கைங்கரியத்தை பல பத்தரிகைகள் தற்போது கடைப்பிடித்து வருகின்றன. இந்தப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய வியாபாரத்துக்குப் போர் அவசியம் தேவையான ஒன்று. ஆயுதவியாபாரிகளுக்கு மட்டுந்தான் போரினால் இலாபம் என்று யார் சொன்னார். இதனால் பல ஊடகங்கள் அடையும் இலாபமும் கொஞ்சநஞ்சமல்ல. எனவேதான் சில ஊடகங்கள் மீண்டும் போருக்கு அழைப்புவிடுப்பது போலச் செயற்பட முயல்கின்றனபோலும்.

இந்தக் கைங்கரியத்தில் சில தமிழ் ஊடகங்ளும் ஈடுபடவே செய்கின்றன என்பது மறுக்கமுடியாத வேதனையான உண்மையாகும். போரின் வடுக்களைத் தாங்கிநிற்கும் தமிழ்ச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய தமிழ்ப் பத்திரிகைகளும், சில வரட்டு அரசியல்வாதிகள் போலவே செயற்பட்டு வருவது தமிழ் மக்களின் சாபக்கேடு என்றுதான் சொல்லவேண்டும்.


சரி, இத்தனை குற்றச்சாட்டுக்களையும் முன்வைப்பவர்கள் பிற மார்க்கங்களைக் குறிப்பிடலாமே என்கின்ற கேள்வி எழுவதும் இயல்பானதுதான். பல தசாப்தகாலப் போரில் சின்னாபின்னமாகிப்போயுள்ள இந்த நாடு தற்போதுதான் விழிப்படைந்து, போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முயன்று வருகின்றது. இந்த ஆணையை மக்களே சிறிலங்காவின் தற்போதைய அரசுக்கு வழங்கியிருந்தனர். அதையேற்றுச் செயற்படும் அரசும் போர் மூண்டதற்கான காரணத்தை அறிந்து, அதனை நீக்கும் வகையில் செயற்பட முயன்று வருகின்றது. இந்த முயற்சிக்குப் புலிகளும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். சர்வதேச சமூகத்தின் ஆதரவும் இதற்கு என்றுமில்லாதளவுக்குக் கிட்டியிருக்கிறது.

இந்நிலையில் இதனை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்று, இந்த நாட்டில் ஒரு நிரந்தரமான அமைதி ஏற்படுமானால் அதுவே இந்த நாட்டுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். இலங்கையை முன்னுதாரணமாகக் கொண்டு, இன்று பெருவளர்ச்சி கண்டுள்ள சிங்கப்பூரை வாய் பிளந்து பார்த்துநிற்கும் இந்த நாடும் நாளை அந்த முன்னேற்றத்தை அடையவேண்டாமா?


இந்த அடிப்படையில் சிந்தித்து மக்களுடைய மனங்களில் சமாதான சகவாழ்வுகுறித்த எண்ணங்களை வளர்க்கும் விதமாக ஊடகங்கள் செயற்படுமானால், அதுவே அவை இந்த மக்களுக்குச் செய்யக்கூடிய உண்மையான சேவை. நாட்டில் நிரந்தரமான சமாதானம் மலர்ந்து மக்களுடைய பொருளாதார நிலை ஏற்றமடையுமானால் ஊடகங்களின் வியாபாரமும் கூடப்பெருகுமே.

மக்களுக்குச் செய்திகளைக் கொண்டு செல்வது என்பதற்குமப்பால் மக்கள் மத்தியில் அபிப்பிராயங்களை உருவாக்கும் பிரதான செயற்பாட்டை வகித்துவரும் ஊடகங்கள் இந்த நோக்கில் சிந்தித்துச் செயற்பட்டால்- இந்த நாடு எதிர்பார்த்துநிற்கும் நிரந்தர அமைதி வெகுவிரைவில் கிட்டிவிடும்.


– சடாயு



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## ஸ்ரீபன் பிளெமிங்



*(அணித்தலைவர்)*

*பிறந்தது* - 1.4.1973. கிறைஸ்ட் சேர்ச், கனரர்பரி.
*அணிகள்-* கனரர்பரி, வெலிங்ரன், மிடிலெ செக்ஸ்(இங்.), நியூசிலாந்து
இடதுகை ஆட்டக்காரர்.
வலதுகை **Slow medium** பந்துவீச்சு
*டெஸ்ட் அறிமுகம்-*
எதிர் இந்தியா 93/94
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் இந்தியா 93/94

டெஸ்ட்- 73, 4295 ஓட்டங்கள், கூடியஓட்டம் 174, 4 சதங்கள், 33 அரைச் சதங்கள். ஒருநாள் சர்வதேச ஆட்டம்- 189, 5081 ஓட்டங்கள், கூடிய ஓட்டம் 116, 3 சதங்கள்.
பொதுவாக ஒருநாள் போட்டிகள்- 293, 8082 ஓட்டங்கள் , கூடிய ஓட்டம் 120, 7 சதங்கள், 54 அரைச் சதங்கள். முதல் தர ஆட்டங்கள்- 155, 9571 ஓட்டங்கள், கூடிய ஓட்டம் 174, 19 சதங்கள், 60 அரைச்சதங்கள்.
ஸ்ரீபன் போல் பிளெமிங் தனது 27 வயதில் (2000/01) இந்தியா, இங்கிலாந்து, மே.இந்தியா, இலங்கை, சிம்பாப்வே என்று வரிசையாகத் தொடர்களை வென்றவர். 30 டெஸ்ட்களில் 12 இல் வென்றவர். அதிகூடிய சாதனைகள் புரிந்த நியூசிலாந்து அணித் தலைவர்.


## அன்ட்ரீ அடம்ஸ்



*பிறந்தது-* 17.07.1975 ஆக்லண்ட்
*அணிகள்-* ஆக்லண்ட், ஹேர்போர்ட்ஷயர் நியூசிலாந்து
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்துவீச்சு
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் இங்கிலாந்து 2001/02
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் இலங்கை 2000/01

அன்ட்ரீ றயான் அடம்ஸ் ஒரு டெஸ்ட் மட்டும் விளையாடியவர். 6 விக்கெட்டுக்கள் பெற்றவர். ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 20, ஓட்டங்கள் 242, விக்கெட் 32. ஒருநாள் போட்டிகள், முதல்தர ஆட்டங்கள் என்பவற்றில் நிறையப் பங்கு கொண்டவர்.


## நாதன் அஸ்ரல்



*பிறந்தது* - 15.09.1971 கனரர்பரி
*அணிகள்* - நோட்டின்கம்ஷயர் (இங்.) டார்விஷயர் (இங்.), நியூசிலாந்து
வலதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை மிதவேகம்.
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் சிம்பாப்வே 95/96
*ஒருநாள் அறிமுகம -*
எதிர் மே. இந்தியத்தீவுகள் 94/95

நாதன் ஜோன் அஸ்ரல் காத்திரமான துடுப்பாட்ட வீரர். டெஸ்ட் போட்டிகளில் இல.5 துடுப்பாட்ட வீரர். ஒருநாள் துடுப்பாட்ட சாதனைக்காக வோல்ரர் ஹட்லி விருது பெற்றவர் . இதனை இவர் 99இல் பெற்றார். ஒருநாள் பந்து வீச்சாளரும் கூட. இங்கிலாந்துக்கெதிராக 168 பந்துகளில், 222 ஓட்டங்கள் (2002-டெஸ்ட்) பெற்றது இவரைப் பற்றி எடுத்துக் கூறும்.


## ஷேன் பொண்ட்



*பிறந்தது* - 07-06-1975 கிரைஸ்ட் சேர்ச்
*அணிகள்-* கனரர்பரி, வோரிக்ஷயர் நியூசிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை வேகப்பந்து
*டெஸ்ட் அறிமுகம -*
எதிர் அவுஸ்திரேலியா 2001/02
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் அவுஸ்திரேலியா 2001/02

ஷேன் எட்வட் பொண்ட் சர்வதேச கிரிக்கெட்டில் தற்போது பெரிதும் பேசப்படுபவர். 8 டெஸ்ட் ஆட்டங்கள், 38 விக்கெட்டுக்கள். 18 சர்வதேச ஒருநாள் போட்டிகள், 32 விக்கெட்டுக்கள். ஒருநாள் போட்டிகள் 44, 59 விக்கெட்டுக்கள்
முதல்தர ஆட்டங்கள் 34, 119 விக்கெட்டுக்கள்.

## கிறிஸ் கெய்ன்ஸ்



*பிறந்தது* -13.06.1970 மால்பரோ
*அணிகள்-* நொட்டிங்ஹம்ஷயர் கனரர்பரி, நோதர்ண் டிஸ்ட்ரிக்ட்ஸ், நியூசிலாந்து.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் அவுஸ்திரேலியா 1989/90
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் இங்கிலாந்து 1990/91

கிறிஸ்தோபர் லான்ஸ் கெய்ன்ஸ் இன்று **No**.1 சகலதுறை வீரர். தாயகத்தில் நேஷனல் பாங்க் விருது, ரெட்பாத் விருது (துடுப்பாட்டம்) வின்சர் விருது (பந்து வீச்சு) என்ற பெருமை. ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் லான்ஸ் கெய்ன்ஸ் (தந்தை) கிறிஸ் கெய்ன்ஸ் (மகன்) இருவரும் 10 விக்கெட்டுக்கள் சரித்தது ஒரு சாதனை.
55 டெஸ்ட், 2853 ஓட்டங்கள். 4 சதம், 20 அரைச்சதங்கள் 197 விக்கெட்டுக்கள். 154 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 3663 ஓட்டங்கள். 4 சதம், 19 அரைச்சதங்கள். சிறந்த பந்துவச்சு 5/42. முதல்தர ஆட்டங்களில் 11 சதம், 62 அரைச்சதம்.


## கிறிஸ் ஹரிஸ்



*பிறந்தது* -20.11.1969 கிரைஸ்ட்சேர்ச்
*அணிகள்-* கனரர்பரி, நியூசிலாந்து
இடதுகை துடுப்பாட்ட வீரர்
வலதுகை **off break,** வலதுகை மிதவேகம்
*டெஸ்ட் அறிமுகம -*
எதிர் இலங்கை 92/93
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் அவுஸ்திரேலியா 90/91

கிறிஸ் சின்ஸான் ஹரிஸ், நியூசிலாந்தின் மிகப் பிரபலமான ஒரு நாள் ஆட்ட வீரர். இறுதிப் பத்து ஓவர்களில் ரன் குவிப்பதில் சமர்த்தர்.
சர்வதேச ஒருநாள் போட்டிகள் 219, 3956 ரன்கள். 1 சதம் 15 அரைச்சதங்கள். 193 விக்கெட்டுக்கள், திறமை 5/42.

## பிரெண்டன் மக்கல்லம்



*பிறந்தது* - 27.09.1981 ஒட்டாகோ
*அணிகள்-* ஒட்டாகோ, நியூசிலாந்து
வலதுகை துடுப்பாட்ட வீரர்
விக்கெட் காப்பாளர்
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் அவுஸ்திரேலியா 2001/02.

பிரெண்டன் பாரி மக்கலம், 14 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியவர். 152 ஓட்டங்கள் பெற்றவர். முதற்தர விளையாட்டு அனுபவங்களினூடாக அணிக்குள் நுழைந்துள்ளார். 2003 உலகக் கிண்ணப் போட்டிகள் இவரது எதிர்காலத்தை நிர்ணயிக்கும்.

## கிரெய்க் மக்மிலன்




*பிறந்தது* - 13-09-1976 கனரர்பரி
*அணிகள்* - கனரர்பரி, நியூசிலாந்து
வலது கைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் அவுஸ்திரேலியா 97/98
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் இந்தியா 2002/03

கிரெய்க் டக்ளஸ் மக்மிலன், தனது டெஸ்ட் வாழ்க்கை ஆரம்பத்தை அதிரடிப் பாதையில் ஆரம்பித்து அரைச் சதம் போட்டவர்.டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாகச் செய்து வந்தவர். ஒருநாள் போட்டிகளில் சிறிது தளர்வு ஏற்பட்டாலும் டெஸ்ட் சராசரிகள் உயர்வாக அமைந்தன. சிம்பாப்வேக்கு எதிரான நேஷனல் பாங் தொடரின் சாதனைகள் இவரை உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதியானவராக்கின. டெஸ்ட்களில் 5 சதம், 16 அரைச்சதங்கள். ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் 124, ஓட்டங்கள் 2964, 2 சதம், 16 அரைச்சதங்கள்.





## கய்ல் மில்ஸ்



*பிறந்தது* - 15.3.1979 ஆக்லண்ட்
*அணிகள்* - ஆக்லண்ட், லிங்கன்ஷயர், நியூசிலாந்து
வலதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்
*ஒரு நாள் அறிமுகம் -*
எதிர் பாகிஸ்தான் 2000/01

கைல் டேவிட் மில்ஸ் டெஸ்ட் அனுபவம் அற்றவர். புதியவர்.சர்வதேச ஒருநாள் போட்டிகள் 16, முதல்தரப் போட்டிகள் 26, பொதுவாக- 53 ஒருநாள் ஆட்டங்கள்.

## ஜேக்கப் ஓரம்



*பிறந்தது* - 28.07.1978
*அணிகள்* - சென்ரல் டிஸ்ட்ரிக்ட்ஸ், நியூசிலாந்து
இடதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் இந்தியா 2002/03
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் சிம்பாப்வே 2000/01

ஜேக்கப் டேவிட் பிலிப் ஓரம், கிறிஸ் கெய்ன்ஸ் பாணியில் ஆடுபவர். பல வீரர்கள் காயப்பட்ட நிலையில் இவர் உள்வாங்கப்பட்டுள்ளார். ஆனால் எதிர்காலத்தில் பிரகாசிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் நிறையவே உண்டு.
ஒருநாள் சர்வதேச ஆட்டங்கள் 29, 377 ஓட்டங்கள். 1 அரைச்சதம்.

## நாளும் ஒரு வினா

**உலகக் கிண்ணப் போட்டிகளில் அணியொன்றுடன் ஆட மறுத்து ஆட்டத்தைப் பகிஷ்கரித்த முதல் நாடு எது?**

**இலங்கை - இஸ்ரேலுடன் விளையாட மறுத்தது. (1979)**

## மத்யூ சின்கிளெயர்



*பிறந்தது* - 9.11.1975 ஆக்லண்ட்
*அணிகள்* - சென்ட்ரல் டிஸ்ட்ரிக்ட்ஸ், நியூசிலாந்து
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்
விக்கெட் காப்பாளர்
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் மே.இந்தியத் தீவுகள் 99/2000
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் அவுஸ்திரேலியா 99/2000

மத்யூ ஸ்டுவட் சின்கிளெயர், 18 டெஸ்ட் போட்டிகளீல் ஆடி 1079 ஓட்டங்கள் (3 சதங்கள், 1 அரைச்சதம்) பெற்றவா. ஒருநாள் சர்வதேசப்போட்டிகள் 32, 806 ஓட்டங்கள். 2 சதங்கள், 4 அரைச்சதங்கள்.


## ஸ்கொட் ஸ்டைரிஸ்



*பிறந்தது* - ,10.7.1975
*அணிகள்* - நொதெர்ண் டிஸ்ட்ரிக்ட்ஸ், நியூசிலாந்து
வலதுகைத் துடுப்பாட்டம்
வலதுகை வேகப் பந்துவீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் மே.இந்தியத் தீவுகள் 2002
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் இந்தியா 99/2000

ஸ்கொட் பேணாட் ஸ்டைரிஸ், ஒரு சகல துறை ஆட்டக்காரர். சர்வதேச ஒருநாள் ஆட்டங்கள் 51, திறமையான பந்துவீச்சு 6/25. ஓட்டங்கள் 712. பொதுவாக ஒருநாள் போட்டிகள் 123, ஓட்டங்கள் 2324, விக்கெட்டுகள் 139.

## டரில் ட:பி



*பிறந்தது* - 11.06.1978 ஒட்டாகோ
*அணிகள்* - நொதர்ண் டிஸ்ட்ரிக்ட்ஸ், நியூசிலாந்து
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிகவேகப் பந்துவீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் அவுஸ்திரேலியா 99/2000
*ஒருநாள் அறிமுகம் -*
எதிர் சிம்பாப்வே 2000/01

டரில் ரேமண்ட் ட:பி, ஷெல் கிண்ணப் போட்டிகளில் பெற்ற 14 விக்கெட்டுகள் மற்றும் ஷெல் விருது போட்டிகளில் 17 விக்கெட்டுகள் தேசிய அணிக்குள் கொண்டு வந்தன. நீண்ட- சிம்பாப்வே, தென் ஆபிரிக்கச் சுற்றுப் போட்டி இவரை, இவரது இடத்தை உறுதிப்படுத்தியது. இவர் முன்னதாகவே இனங்காணப்பட்டு நியூசிலாந்து கிரிக்கெட் அக்கடமியில் பயிற்றுவிக்கப்பட்டவர். 12 டெஸ்ட் போட்டிகள், 45 விக்கெட்டுகள், 44 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 52 விக்கெட்டுகள். அண்மையில் முடிவடைந்த இந்தியாவிற்கெதிரான ஒருநாள் போட்டித் தொடரில் ஆட்டத்தொடர் நாயகன். இதனால் ஆடம்பரக்கார் ஒன்றின் உரிமையாளர். சிறந்த களத்தடுப்பாளர்.


## டானியல் வெட்டோரி



*பிறந்தது* - 27.1.1979 ஆக்லண்ட்
*அணிகள்* - நொதர்ண் டிஸ்ட்ரிக்ட்ஸ் நியூசிலாந்து
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்
இடதுகை மெதுவான **ORTHODOX OFF SPINNER**
*டெஸ்ட் அறிமுகம -*
எதிர் இங்கிலாந்து 96/97
*ஒருநாள் அறிமுகம -*
எதிர் இலங்கை 96/97

டானியல் லூக்கா வெட்டோரி 1997 டெஸ்ட் விளையாடியபோது, நியூசிலாந்தில் டெஸ்ட் விளையாடிய அதி குறைந்த வயதுடையவர். (18 வருடம் 10 நாள்) தற்போது அணியின் தவிர்க்க இயலாத வீரர். மிகச் சிறந்த **NIGHT WATCH MAN.** மே.இந்தியத்தீவுகளுக்கு எதிராக 2 டெஸ்ட்களில் 8 மற்றும் 7 விக்கெட்டுகள். அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 14 விக்கெட்டுகள். டெஸ்ட்களில், 100 விக்கெட் பெற்றவர்களில் இரண்டாவது வயதில் குறைந்தவர். 44 டெஸ்ட், 878 ஓட்டங்கள், 139 விக்கெட்டுகள். ஒருநாள் சர்வதேசப் போட்டிகள்- 99, 82 விக்கெட்டுகள், 497 ஓட்டங்கள். திறமையான பந்துவீச்சு- டெஸ்ட் 7/87

## லோ வின்சன்ட்



*பிறந்தது* - 11.11.1978 ஆக்லண்ட்
*அணிகள்* - ஆக்லண்ட், நியூசிலாந்து
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்
விக்கெட் காப்பாளர்
*டெஸ்ட் அறிமுகம் -*
எதிர் அவுஸ்திரேலியா - 2001/02
ஒருநாள் அறிமுகம் -
எதிர் இலங்கை - 2000/01

லோ வின்சன்ட் 11 டெஸ்ட் ஆட்டங்களில் 558 ஓட்டங்கள் பெற்றவர். 1 சதம் மற்றும் 5 அரைச்சதங்கள் தன் கணக்கில் சேர்த்திருப்பவர்.
47 ஒருநாள் சர்வதேசப்போட்டிகளில் விளையாடி இவர் பெற்ற ஓட்டங்கள் 996. 4 அரைச்சதங்கள். பொதுவாக இவர் 97 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 2244 ஓட்டங்கள் பெற்றுள்ளார். 2 சதங்களும் 10 அரைச்சதங்களும் பெற்றுள்ளார். அணியின் நம்பிக்கைக்குரிய வீரராக கணிப்பிடப்படக் கூடியவர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நாளை கறுப்பு நாளாக பிரகடனம்; கல்வி அமைப்புகள் அறைகூவல்!

சிறிலங்கா சுதந்திரமடைந்த நாள் பெப்ரவரி 4 ஆகும். ஆனால், அந்த சுதந்திரத்தை தமிழர்களாகிய நாம் அனுபவித்தோமா என்றால் இல்லை என்பதே பதிலாகும் என, யாழ். கல்விசார் அமைப்புக்களின் பேரிணையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பேரிணையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக கப்பட்டுள்ளதாவது,

காலங்காலமாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எமது மண்ணில், எமது மூதாதையினரால் ஆளப்பட்ட எமது மண்ணில், எமது சுதந்திரம் அந்நியர் ஆக்கிரமித்த காலம் முதல் கேள்விக்குரியதாகவே இருந்து வருவது கண்கூடு.

எமது நிலம் பறிக்கப்பட்டது, மொழி புறந்தள்ளப்பட்டது. பொருளாதாரமும், பண்பாடும் திட்டமிட்டு சீரழிக்கப்பட்டன. இது தமிழரின் சோகவரலாறு.

சிறிலங்கா சுதந்திர தினமென்பது, தமிழினத்தின் மனங்களில் ஆழப் பதிந்த துயரம் மிக்க ஒரு நாளாகவே இருந்து வருகிறது.

இன்றைய அமைதிக்கான காலத்தில் கூட, எமது கல்விச்சாலைகளில் இயல்பான கல்விநிலை இடம்பெற அரச படைகள் இடையூறாகவே இருக்கின்றன. இது பல தடவை பல தரப்புக்கும் எடுத்துக்கூறப்பட்டும், அந்த நிலையில் மாற்றமில்லை. இதுதான் சுதந்திரமா?

சிறைக்கூடங்களின் இறுகப் பூட்டிய கதவுகளுக்குள்ளால், இன்னமும் வெளிவரும் பல்லாயிரம் ஏக்கப்பெருமூச்சுக்கள் தெரிவிப்பதுதான் சுதந்திரமா?

இருக்கிறார்களா? இல்லையா? என்ன ஆனார்கள் என்றறியாதுபோன உறவுகளுக்காக, அவர்களின் உறவுகள் சிந்தும் கண்ணீர்தான் சுதந்திரமா?

இன்னும், இன்று உலகின் கண்களுக்கு ஏமாற்றுவதற்காக வெள்ளையடிக்கப்பட்ட எமது நூலகமும், பல்லாயிரம் பயன்மிகு நூல்களும் எரிந்தழிந்து போனதுதான் சுதந்திரமா?

திட்டமிட்ட ஒடுக்குமுறையின், பாராமுகமுமாக தொடர்ந்தும் அழுத்தப்படும் தமிழினத்திற்கு ஏது சுதந்திரம்? சொந்த நிலங்களில் குந்துவதைத் தடுக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களின் பெயர்தான் சுதந்திரமா?

எனவே எம்மினிய தமிழ் உறவுகளே!

பெப்ரவரி 4, எமதினத்தின் துயரமாக இருந்துவரும் சிறிலங்கா தேசத்தின் சுதந்திரநாள். எமது துக்க நாள்.

எனவே, பெப்ரவரி 4 அன்று சகல கல்விக் கூடங்களிலும் கறுப்புக்கொடிகளைப் பறக்க விடுவதோடு கறுப்புப்பட்டி அணிந்து எமது துக்கத்தை வெளிப்படுத்துவோம்.

பெப்ரவரி 4 என்பது தமிழரின் துக்கநாளே! என குறிப்பிடப்பட்டுள்ளது.

## முடிவுகளை எடுக்கும் தரப்பினராக அடுத்த பேச்சில் அரச பிரதிநிதிகள்

### பிரதமர் ரணில் உத்தரவு

(கொழும்பு)

ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெறவுள்ள ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ள அரச தரப்புப் பிரதிநிதிகளை - பங்குகொள்ளும் தரப்பாகக் கலந்துகொள்ளாமல், தீர்மானம் எடுக்கின்ற தரப்பாக அமர்ந்து பேசுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இத்தகவலை அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியினர் தரப்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. இவை தொடர்பாகவும் அடுத்த சுற்றுப்பேச்சுக்களின் போது பேசப்படும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, இடைக்கால நிர்வாகசபை, சமஷ்டி அமைப்பு, இராணுவ விரிவாக்கம், புலிகளின் இராணுவம், பொலிஸ், நீதி விரிவாக்கம் என்பன குறித்தும் புலிகளுடன் அடுத்த சுற்றுப் பேச்சுக்களின்போது பேசுமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளதாக அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

## மிக முக்கியமான விவகாரங்களில் என்னுடன் முடிவெடுக்கவேண்டும்!

### பிரதமர் ரணிலுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)

உணர்வுமயமான முக்கிய பிரச்சினைகளில் அரசாங்கம் தன்னுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டும் என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாதுங்க தெரிவித்திருக்கிறார்.

கடந்த 29 ஆம் திகதி பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தேசிய நலன்களைக் கவனிக்கும் பொறுப்பில் இருப்பதால் - முக்கியமான விடயங்களில் முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் அரசாங்கம் என்னுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டும்.

புலிகளுக்கு வானொலி உபகரணம் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்பட்ட சம்பவத்தில், நோர்வே தூதரகம் சம்பந்தப்பட்டிருக்க, மற்றவர்களுக்கு வழங்கப்படாத சலுகைகள் புலிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதை அனுமதிக்க முடியாது.

இது தேசிய பாதுகாப்புக்கும், அமைதிக்கும் பங்கத்தை ஏற்படுத்தும். புலிகள் பெற்ற வானொலி உபகரணங்கள், அமைதி முயற்சிக்குப் பயன்படும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத நியாயம்.

இந்த வானொலி உபகரணங்களைப் பயன்படுத்திப் புலிகள் மேற்கொண்டுவரும் ஒ[illegible]பரப்புக்களில், அமைதிப் பிரசாரங்கள் செய்யப்படவில்லை.

மாவீரர்களின் நினைவு நிகழ்ச்சிகளும், புலிகளின் பாடல்கள், இசைகளுமே ஒலிபரப்பாகின்றன. இது அமைதிக்கான மக்களின் மனநிலையைப் பாதிக்கும்.

கிளிநொச்சியிலிருந்து 20 கி.மீ. சுற்றுவட்டாரத்தில், ஒலிபரப்பை இக்கருவிகளால் மேற்கொள்ள முடியும். அதைத்தவிர மேலும் சாதனங்களைப் பொருத்தி நூற்றுக்கும் அதிகமான கி.மீ. தூரத்துக்கும் ஒலிபரப்பை மேற்கொள்ள முடியும்.

எனவே, இந்த இறக்குமதியை தொலைத் தொடர்பு சீராக்கல் ஆணைக்குழு எந்த வகையில் அனுமதித்தது என்பது தெரியவில்லை.

இதனால், இவ்விவகாரம் தொடர்பாக தொலைத்தொடர்பு அமைச்சரை முழுமையான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்துங்கள் என, ஜனாதிபதி சந்திரிகா எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடாநாட்டில் டெங்கு அபாயம் பத்துப்பேர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீண்டும் டெங்கு நோய் அபாயம் தோன்றியுள்ளது.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் தினமும் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். நோயாளர்களில் இதுவரை பத்துப் பேருக்கு டெங்குக் காய்ச்சல் தொற்றியிருப்பது இரத்தப் பரிசோதனையின் பின் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக - கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, கைதடி போன்ற பிரதேசங்களிலிருந்தே டெங்குக் காய்ச்சல் தொற்றிய நோயாளிகள் இனம் காணப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## பிரமுக வங்கி தங்கச் சான்றிதழ் பெற்றவர்கள் மீது விசாரணை!

### யாழ்ப்பாணத்தில் சிலர் சிக்கலாம்

(கொழும்பு)

அரச மற்றும் பொதுநிதியை பிரமுக வங்கியில் வைப்பிலிட்டு, தங்கப் பத்திரங்களைத் தரகாகப் பெற்ற உயர் மட்ட அதிகாரிகள் மீதான விசாரணைகளை, இரகசியப் பொலிஸார் தீவிரப்படுத்தவுள்ளனர்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் பலர், அரசாங்க மற்றும் பொதுநிதியைத் தவறாகக் கையாண்டு - பிரமுக வங்கியில் வைப்பிலிட்டனர். இவர்களுக்கு தங்கச் சான்றிதழ்கள் பிரமுக வங்கியினால் வழங்கப்பட்டன.

இவ்வாறு தங்கச் சான்றிதழ் பெற்றவர்கள் பற்றிய விசாரணைகள் குறித்து இரகசியப் பொலிஸார் தீவிரமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களை அடுத்த சில வாரங்களுக்குள் பொலிஸார் விசாரிக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

பொ.ஐ.முவின் கட்டுப்பாட்டிலுள்ள மேல் மாகாண சபையின் நிதியை பிரமுக வங்கியில் வைப்பிலிட்டது தொடர்பாக பொ.ஐ.முவின் முக்கிய நபர் ஒருவரும் விசாரிக்கப்படவுள்ளார்

- எனத் தெரியவருகின்றது.

## இடம்பெயர்ந்த மக்களின் நில உரிமம் அடுத்த கட்டப் பேச்சில் ஆராயப்படும்

பேர்லினில் நடைபெறவிருக்கும் அடுத்தகட்ட சமாதானப் பேச்சுக்களின்போது, கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் நில உரிமம் தொடர்பான சட்டப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் உள்ள பல கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் பலர், கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். இவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் சட்டவிரோதமான முறையில் அத்துமீறிக் குடியேறிய பல குடும்பங்கள் இன்னமும் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறான நிலங்களை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைப்பது சம்பந்தமான பிரச்சினைகளை, எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய விடயங்கள் விரிவாக ஆராயப்படவுள்ளன.

இவற்றைவிட, யாழ்.குடாநாட்டில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான மனிதாபிமானப் பிரச்சினைகளும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளும் இப் பேச்சுக்களின்போது ஆராயப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

## மீள்குடியமர்வை....

யார் குறிப்பிட்டிருந்த - ஆயுதக் களைவு, கனரக ஆயுதநிலைகளை மாற்றியமைத்தல், முன்னரங்க நிலைகளில் மாற்றம் ஆகியவற்றை விடுதலைப் புலிகள் கடுமையான விமர்சனத்துடன் நிராகரித்திருந்தனர்.

இதையடுத்தே - அமைதிச்சூழ் நிலையையோ, மீளக்குடியமர்வையோ பாதிக்காத வகையில் உயர் பாதுகாப்பு வலயத்தை மாற்றியமைப்பது பற்றிய ஆலோசனைகளைத் தருமாறு நம்பியாரிடம், அரசாங்கம் கோரியிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் சதீஸ் நம்பியார்- இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென், அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பேர்ணான்டோ மற்றும் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல ஆகியோருடன் முக்கிய பேச்சுக்களை நேற்று நடத்தினார்.

இதேவேளை - இதனைத் தொடர்ந்து மீண்டும் உயர்பாதுகாப்பு வலயங்களை நேரடியாகச் சென்று அவதானிப்பதற்கு சதீஸ் நம்பியார் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இறுதியறிக்கை தயாரிப்பதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை - தனிப்பட்ட வகையில் அவர் சந்திக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

(01,200)

## பிரிட்டிஷ்...

இராணுவ நிபுணர் சதீஸ் நம்பியாரின் அறிக்கையினையும் கருத்தில் எடுத்து இறுதியான தீர்மானம் ஒன்றினை அரசு மேற்கொள்ளும் என அமைச்சர் மிலிந்த மொறகொட மேலும் தெரிவித்தார். (200)

## யாழ்.வரும்..

ரிகள் பங்குபற்றும் மாநாட்டில் பங்குபற்றுவார்.

இம்மாநாட்டைத் தொடர்ந்து குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்திருக்கும் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிடுவார். இன்று மாலையே கொழும்பு திரும்பும் இவர், இன்று இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடாத்தவுள்ளார்.

(200,01)

## வட- கிழக்கு....

படையதிகாரிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இக்கூட்டத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் சென்றிருந்தார். கூட்டத்தில் படையதிகாரிகளைத் தவிர வேறெவரையும் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை.

இக்கூட்டத்தில், அனுராதபுரத்தின் 21 ஆவது டிவிஷன், திருகோணமலையிலுள்ள 22 ஆவது டிவிஷன்களின் கட்டளை அதிகாரிகள் அடங்கலாக வடக்கிலுள்ள அனைத்துப் படைத் தளபதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

பிரிகேட் தளபதிகளும் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்ட இந்தக் கூட்டமே புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் இடம்பெற்ற படையதிகாரிகளின் மிகப் பெரிய கூட்டம் இது எனத் தெரிய வருகின்றது.

## பேர்லின்...

குழுவில் அங்கம் வகிக்கும் மூத்ததளபதி கேணல் கருணா மட்டக்களப்பிலிருந்து இன்று கொழும்பு செல்லவுள்ளார்.

தென்மராட்சி ஆசிரியர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி

தென்மராட்சியில் இயங்கும் எமது கிளை நிறுவனம் மூலம் பாடசாலை ஆசிரியர்களுக்கு கணனி அறிவை வழங்க இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுடையவர்கள் பதிவினை மேற்கொள்ளவும்



STP Your Partner in IT Solutions
54A, Palaly Road, Kantharmadam, Jaffna & Sankaththanai, Chavakachcheri

சிறு விளம்பரம்

கடைகள் விற்பனை

சாவகச்சேரி AGA அலுவலகம் முன்பாக மூன்று கடைத் தொகுதி விற்பனைக்குண்டு. தொடர்புகள்: செவ்வந்தி, நவீன சந்தை, சாவகச்சேரி. T.P இல. 070 - 212961 (227)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-544)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிரஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
எம்.ஜி.ஆர்., ராஜசுலோஜா நடித்த
இதயக்கனி
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி!
TOMB RAIDER
(சி-545)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.